


# கவின் கலாஞ்சலி

என் காதல் கவிதைக்கு பல கண்ணீர்க் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்வின் துயர்



துயர் சுமந்து வலியின் தேடல்
உயிர் பிரிந்த உணர்வின் தேடல்
நிலவைத் தொலைத்த வானம் போல்
நீரைத் தொலைத்த கடலைப்போல்
நெஞ்சை இறுக்கி நெருடுதிங்கே
நிஜத்தை இழந்து நிழலாகி ......... உமை
நெருப்பது தின்று போனதுவோ ..........

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டோர் வருவாரோ - இம்மாநிலத்தே

ஆண்டுகள் நூறு அகன்று போனாலும்
மீண்டும் நீர் வருவீர் எம் மனத்திடையே

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"



# அமரர்
# கலாதேவி கணேசலிங்கம்
# அவர்கள்

மலர்வு
23.03.1961

உதிர்வு
24.07.2014

## திதி வெண்பா

ஜய வருடத்து ஆடிமாதம் இருபத்துநான்காம் நாளினிலே
பூண்ட திதி அபரபக்க திரயோதசி திதி தனிலே
கூண்டு விட்டகன்று எம் குல மாதாள்
ஆண்டவன் அடி சேர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் வணக்கம்

தேள் என் செயும் தீண்டிய விசம் தான் என் செயும்
தோள் என் செயும் கொடுங் கோல் தான் என்செயும்
வினை என் செயும் செய்வினை தான் என் செயும்
வேழ முகத்தான் என உள்ளத்தில் வீற்றிருக்கையிலே

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடி பரவ
மங்குள் மதி தவழ் மாடவீதி
மஞகநிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வமல்கும்
சீர்கொள் செங்காட்டம் குடியதனுள்
கங்குல் விளங்கரி ஏந்தி ஆடும்
கணபதீச்சரம் காமுறவே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
உளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவுடையாற்கு வழிவழி யாளாய்
மணஞ் செய் குடிப் பிறந்த
பழ அடியாரொடும் கூடி ெழிம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந் தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளி விளங்க
அரந்தை கெடப் புகலியர் கோனமுது செயதிரு முலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி போற்றி

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க சீரடியா ரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

என்செயலாவது யாதொனறம் இல்லை இனித் தெய்வமே
உன்செய லேஎன்ற உணரப்பெற் றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை தீவினை யாதெனறு மில்ல பிறப்பதற்கு
முன்செய்த தீவனையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே.

வீடருக்கத் தாயருக்க வேண்டும்மனை யாள இருக்க
பீடிருக்க ஊன்இருக்கப் பிள்ளைகளம் தாமிருக்க
மாடிருக்க கன்றருக்க வைத்பெருள் இருக்கக்
கூடிருக்க நீ போனகோலமென்ன கோலமே.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்திக்கு காண்இது எப்படியோ
அறமார் புகழ்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண்நல் மருந்துனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தாற் பொய்யாதொழுகிய கலாநங்கை
# உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளள்

இலங்கைத்தீவின் வடபால் அமைந்த சிரசெனப் போற்றும் யாழ்.குடா நாட்டின் மேற்குக் கடலினில் உள்ள தீவுகள் ஏழினில் அதிக தூரத்தில் உள்ளதும் பாற்தீவு, பசுத்தீவு, மூலிகைத் தீவெனப் பல்வகைப் பெயர் கொண்ட நெடுந்தீவு தன்னிற் பண்பொடு வாழ்ந்த தந்தை சாம்பசிவமும் அவர் தம் மனைவி இராசேஸ்வரியெனும் மங்கை நல்லாளும் பெற்று வளர்த்த குணரஞ்சனோடு கலாதேவி என்னும் கவினுறு நங்கையும் இனிதே வாழ்ந்தனர்.

தாயார் தமக்குப் பல்லவர் காலச் சிவன்கோயில் உள்ள ஊராம் உருத்திரபுரத்தின் வைத்தியசாலை யில் மக்கள் சேவையாம் பரிசாரகர் பணியும் தாயார் இராசேஸ்வரிக்குக் கிடைக்கலானது. இதனாற் பிறந்த இடம் விட்டுக் குடும்பத்தார் அனைவரும் உருத்திரபுரமது வந்துமே சேர்ந்தனர். தொழிலில் இணைந்தனர். இங்கே வந்ததும் வைத்திய சாலைக்கு அண்மையில் அமைந்த ஆனந்தம் பண்ணையிற் காணி பெற்று வீடமைத்து அயலவர் தம்முடன் அன்பாய் வாழ்ந்தனர். பிள்ளை கள் இருவரும் உருத்திரபுரத்தின் மகாவித்தியாலயத்தில் படிக்கத் தொடங்கினர். கலாவெனும் நங்கை கற்பதோடன்றி உள்ளூரில் உள்ள உறவுகளுடனே நாட்டின் வளர்ச்சிக்கு நற்பணியாற்றினார். இவரது முகத்திற் புன்னகை இயற்கையாய் அமைந்தது. எவர்க்கும் உதவிடும் தன்மை கொண்டவர். வளர்ந்து மங்கைப்பருவம் அடைந்தார். தாயார் மகளுக்கு வரனும் தேடினார்.

உருத்திரபுரத்தில் உவகையாய் வாழ்ந்த கந்தையா அவர்களும் கவினுறு பொன்னம்மாவும் முதன் முதற் பெற்ற ஆண் கணேசலிங்கம் என்னும் பெயருடைக் கட்டழகுடையோன் கமத்தொழிற் போதனாசிரி யர், விளையாட்டுக் கழகம் என்று பல்வகை நிறுவனங்களை நடத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குரியோன் கவிஞருமாவார். புத்தக நிலையத்திற்கும் காவலாளி இவரே. இத்தகு மகனாரை நிச்சயம் செய்தனர். மக்கள் பலர் கூட மங்களமாகவே விவாகம் நடந்தது தம்பதிகள் இணைந்தனர். மனைவி கலாவுக்கு உறவினர் தமக்கு உதவிகள் புரிவதில் அலாதிப் பிரியம். நாம் அங்கு இருக்கும் போது கணவனும் மனைவியும் ஒன்றாய் வந்து உறவு கொண்டாடி மகிழ்ந்து செல்வார். இவர்கள் வாழ்வில் இறைவனருளால் யதார்த்திகா, பிரார்த்தன், கவியார்திகா, நிதார்த்தன் என்னும் பெயருடை மக்களாய் உதித்தனர். கல்வி கற்றனர், பல்கலை சென்றனர்.

கிளிநொச்சியில் ஏற்பட்ட யுத்தம் இவர்களை வீட்டொடுகலைத்து உறவினர் தம்முடன் ஊரூராய் அலைந்து அல்லற் பட்டனர். ஆகாய விமானக் குண்டு மழையும் செல்லடி தன்னுடன் துப்பாக்கி ரவையும் மக்களை ஓட ஓடத் துரத்தியே கலைத்தது. உண்ண உணவோ படுக்கப் பாயோ எதுவும் இன்றிப் பங்கர் வாழ்க்கையே தஞ்சமெனக் கொண்டு வாழலாயினர். பாதுகாப்பிடமாக அரசு அறிவித்த இறுதி இடமான வலைஞர் மடத்தில் இருந்த போது குண்டுச் சிதறல்கள் பட்டதை யும் அறியாது சென்றபோதும் இறந்த உடல்களைக் கடந்து நடந்து மனதைக் கல்லாக்கி மணலிற் சென்றனர். அரசின் அழைப்பில் அவ்விடம் விட்டு அவர்பக்கம் சென்றபோது அவரது செல்லக் குழந்தை கவியார்த்திகாவும் சிறிய தந்தை சிவா அவர்களும் துப்பாக்கிக் குண்டாய் வந்த காலன் தமக்கு இரையாய்க் கொடுத்து உயிரில்லாத உடலமாயி னர். இந்த யுத்தத்தில் வீழ்ந்த குண்டும் அதன் தாக்கமும் யாரையுமறி யாது கலாவின் உடலிற் தாக்கிய குண்டு நோயாய் மாறியது இதனை வெளியே காட்டாது அவரும் குழந்தைகள் கணவன் யாருமே தெரியாது மகிழ்வுடன் வாழ்ந்தார். சிரிப்பால் எவரையும் தன் வசமாக்கினார்.

இப்படி வாழ்ந்த போதும் இயலாது போகவே இயலாமை அறிந்து வைத்தியசாலையில் சேர்த்தனர் அவரை அங்கு தன்னைப் பார்க்க வருவோர் அனைவர்க்கும் தனக்கு உள்ள நோயை வெளிக்காட்டாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்புடன் வரவேற்பார் இறுதி நாளிலும் தனது குலதெய்வம் தன்னை வணங்கியே இன்பம் அடைந்தார் அன்பரைச் சந்தித்தார்.

நெருநல் உளனொருவன் இன்றில்லைஎன்னும் பெருமை உடைய இவ்வுலகில் இறைவனை வேண்டி இவ்வுலகை நீத்தார். கணவன் பிள்ளைகள் கதறியழுதிட உற்றார் உறவினர் உரத்துக் குழறிட அயலவர் சுற்றத்தார் அனைவரும் அலறினர். பிறந்தார் யாவரும் இறப்பது நியதி என்றே விதி மேற் பழியைப் போட்டே மனதைத் தேற்றுவோம். இறைவன் எமக்களித்த மறதியை நினைத்து சாந்தி பெறுகவென அனைவரும் ஒன்றாய் இறைவனை வேண்டுவோம்.கணவன் பிள்ளைகள் துக்கத்தில் நாமும் பங்கு கொண்டு கவலையை ஒழிப்போம். உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் போலும் பிறப்பு என்றும் காயமே இது பொய்யடா இன்று செத்த பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள் கத்தும் கணக்கென்ன என்ற கூற்றினை மனதிருத்தி அனைவரும் ஒன்று கூடிச் சாந்தி! சாந்தி! !சாந்தி!!! என்று சாந்தியடைவோம்.

என்றும் அன்பகலா

**கா.நாகலிங்கம் -**

இளைப்பாறிய அதிபர் உருத்திரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுடல் கடந்த பிறவிகளின் நல்லவை அல்லவைகளின் வினை வடிவம் இப்பிறவியில் ஆற்ற வேண்டிய பணிக்காய் விடுதலைக்காய் உயிரின் வழிநடத்தலில் உடல்தாங்கி வந்துள்ளது. உயிர் தனித்து இயங்க முடியாது அதற்கு உடல் வேண்டும். கடந்த பிறவிகளின் கர்மபலன் காரணமாய் நோய், துன்பம், பிணி, மூப்பு, ஆயுள், மரணம் என்று தாயின் கர்ப்பத்திலிருந்தே குறிதப்பாது விரைகின்றது. வாழ்வின் தரிப்புகளில் நின்று வாழ்ந்து தன் குறிக்கோளில் குறி வைத்து மற்றொன்று சூழினும் தான் முந்துறும் குழந்தையின் வளர்ச்சி போல் நோயும், வினையும் வளர மறுபிறவிக்குரிய வாசல் மரணம் என்பதால் மரணமாய் விடை காண் கிறது. மறுபிறவி என்பது ஆத்மா விடுதலை காணும் பாதையின் தரிப்பிடம் இதற்கு உலகம் கண்ணீர் வடிக்கிறது, கரைகிறது.

திருமணமாகி இணைந்து வாழ்ந்து இல்லறம் காத்து குழந்தைகள் ஈன்று மறு பிறவிக்கான நோயுடன் கலந்து உழன்று மரணமாய் விடை காண்கிறது. நாம் ஆயுளை நீட்டிப் பார்க்கன்றோம். மறுபிறவிக்குரிய நாள் ஐம்பத்துமூன்று ஆண்டுகள். முன்பு பதினான்கு வயதில் ஒரு மரணம் நாம் நீளப் பார்த்தோம் பிறப்பின் எல்லையின் நோக்கம் பூர்த்தியானால் மறுபிறவிக்குச் செல்லும் நாள் மாறி விடுமா மாறிவிடின் விதியின் பார்வையில் அது தவறு. பற்றின் காரணமாய் பொய்யை உண்மையென மயங்கி நீண்டகாலம் கண்ணீர் வடிக்கின்றோம் தொடரும் கண்ணீர் பொய்யில் கரைகிறது. ஒரு பயணத்தின் போது போட்ட உடையும், வாகனமும் மாற்றவேண்டியதே மறுபிறப்பில் வேறு உடல், வேறு உறவு, வேறுமொழி, வேறுநாடு, ஆண்,பெண், அலி, வேற்று உயிரிகள் என விரிந்து விடுதலைக்காய் பிறக்கின்றது விடுதலைக்காய் மடிகின்றது. மறுபிறவி உயர்வு நோக்கிச் செல்லும் படிகள் மரணம் என்னும் வாசலாலேயே செல்ல முடியும் இங்கு மரணம் என்று பெயர், அங்கு பிறப்பு என்று பெயர் இறப்பும் பிறப்பும் ஒன்றான நிலை

பஞ்சபுலங்களினால் அறியப்படுவன யாவும் மறையும், அழியும், மாற்றமடையும் அவை உண்டாக்கப்பட்டவை ஆழ்கடலும் நீழ்விசும்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு நிலைத்த யாவும் அழியுந்தன்மை உடையன இறைவனை பஞ்சபுலன்களினால் பார்க்க முடியாது அது உணர வேண்டிய பொருள் மனதை ஒரு நிலைப்படுத்தி உச்சி, புருவமத்தி, இதயம், இங்கே உணர வேண்டும், ஆத்மாவின் இருப்பை உணர்ந்து நான் என்று இருப்பில் நின்றால் உடல் உணர்வு நீங்க வேண்டும். செய்யும் செயலனைத்தும் இறைவன் திருவடிக்கு இட்டு பற்றின்றி வாழ்ந்தால் பிறவிஅறும்

வள்ளுவர் வாக்கு

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்றுவிடற்கு" அப்படிப் பற்றினால் தொல்வினை வல்வினை மாழும் தொடரும் ஊழை எரிக்கும் அங்கு அவன் திருவடி ஒளிரும் கண்ணீர் ஆட்சி அழியும்.

**பெ. திருச்செல்வன்**
**திருநகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் பிரிந்து உயிர் கருகும்
## உன் இதய நாயகன் கலா கணேசன்

பொன்னொளி சிந்தும் மலர் போல
பூத்த முகத்துச் சித்திரமே
என்னுயிர் கனியே இன்னமுதே
எப்படிப் பிரிவாய் எனை விட்டு
மின்னில் பொன்னில் மென்மையினில்
மேவி என்றும் என்னோடு
அன்பே நீயும் வாழ்ந்திருப்பாய்
அஞ்சலி தந்தேனே அகவானில்

ஐந்து பத்து மூன்று நின்
ஆயுள் என்று சொன்னார் யார்
இந்த உயிர் உள்ளவரை எந்தன்
இதயம் உனக்கே தான்
பந்தம் பாசம் போயகல
பரம நிலையும் கூடுமன்றோ
சிந்தை நிறைந்த தேவியுனை
தினமும் போற்றிப் பணிகின்றேன்

புன்னகையே எந்தன்
புனர்ஜென்மக் காரிகையே
பொன்னகையே தேவையில்லா
பேரழகின் நாயகியே
மென்மையினால் இந்த
மேதினியை ஆண்டவளே
உன்னைப் பிரிந்திங்கு
உயிர் வாழ்தல் எப்படியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு அன்னையென
அரவணைத்து அன்பு செய்தாய்
சின்னப் பொழுதுகளை
சிரிப்பாக்கி வாழ வைத்தாய்
முன்னை செய் தீவினையோ
நாமறியோம் என்னவளே
உன்னைப் பறித்தானோ
கண்ணில்லாப் பெருங் கொடியோன்

உள்ள ம் கருகுதம்மா
உனைக் காண முடியாமல்
கள்ளமில்லா வதனமதை
காண மனம் ஏங்குதம்மா
எள்ளளவும் இங்கிருக்க
எனக்கு மனம் இல்லையம்மா
உள்ளளவும் என்னுயிரில்
தேன் வார்த்து நின்றவளே

செல்லமென நீயழைத்து
செய்த பல சேவையினை – நீ
இல்லாத இந்நேரத்தில்
இதயமது நோகுதம்மா
புல்லும் சிலும்பாது
பூப்பாதம் வைத்தவளே
கல்லும் கரைந்துருகி
கசிய வைத்துப் போனதென்ன
எல்லாமும் நீயாகி
என்னுயிரில் வாழ்ந்திருந்தேன்
இல்லாமல் போகவில்லை
இருக்கின்றாய் மனங்களெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாமல் கொல்ல வந்த
கொடுநோயின் காலனவன்
இல்லாமல் போகும் நாள்
வெகு விரைவில் வந்திடட்டும்

முத்துப் பல்லழகே
முகிழ்ந்திட்ட மல்லிகையே
பித்துப் பிடித்திங்கு
நான் தவிக்க வைத்ததென்ன
சித்தம் தடுமாறுகிறேன்
செய்வதறியாமல்
அத்தனையும் செய்தவளே
அழுவதற்கு ஏன் என்னை வைத்தாய்

உத்தமியே நீயிருந்து
உள்ளம் கலந்திருந்தாய்
சத்தமது இல்லாது
சரண் புகுந்தாய் எவ்வுலகம்
கத்தும் குரல்களெல்லாம்
காதில் விழவில்லையா அம்மா?
செத்துத் தொலைகின்றேன்
நித்தம் நித்தம் உன் நினைவால்
புத்தம் புது மலர் போல்
பூஜையறை மல்லிகை போல்
சுத்தம் நிறைந்தவளே
சுகந்தமது தந்தவளே
எத்தனை நாள் இப்படியே
ஏங்கியிங்கு வாழுவது
அத்தன் எனை அழைக்கும்
அந்நாளும் எந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவிஞான் வாழும்
புரிதல் பல புகன்றாய்
கவிஞன் என மாறும்
காலத்தை அன்று தந்தாய்
குவித்தேன் என் உள்ளமிதை
குலவிளக்கே உன் நினைவில்
தவிக்கின்றேன் கணமெல்லாம்
தாங்க முடியவில்லை
கவித்தேன் தந்தவளே
காதலிப்பேன் எப்பிறப்பில்

**- உனது அன்புக் கணவன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை கலாஜோதி

கருவிழி காத்திடும்
கலங்கரை இமைவிழி
காலமெலாம் விளித்திடும்
கலாஜோதிக் கவினொளி!

அன்பின் தூயவள்
அகிலாண்ட தாயவள்
அரனடித் தேவியவள் – எம்
அரவணைப்பின் அன்னையிவள்!

யாத்திரை சென்றனள்
யாழிருந்து சொர்க்கபுரீஸ்வரம்
யாமறியோம் சமாதிமார்க்கம்
யாரம்மா நீ சொல்வாயா?

கருத்தினில் தேடவில்லை!
உருவிலும் காணவில்லை!
உயிர் உறவிலும் நீங்கவில்லை!
உயிரோட்ட கலாபக் காதல்!
உணர்வினில் உறைந்திட்ட ஆனந்த கலாலயம்!

பிரிவுத் துயர் வரிகள்
**- யதார்த்திகா - மகள்-**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா நீ இன்றி ....

ஆத்தா பெருமையென்றால்  அனைவருமே சொல்வது தான்
என் ஆத்தா பெருமையெல்லாம் எட்டி விடா  ஏணியெல்லோ
உன் வயிற்றில் பிறந்ததினால் பெருமை கொள்ளும் இவ்விதயம்
உன்னை விட்டு  எப்படித்தான் இருக்குமென்று தெரியல்லையே?
ஊட்டி வளர்த்த கையும், உறக்கம் மறந்த கண்ணும்
பார்க்கையிலே  தித்திக்கும் பார் நிலவு முகம் எங்கே?
இட்ட இட்டலியில் உன் நினைவு
வட்ட தோசையிலும் உன் நினைவு
தொட்டு சுவைத்த கையிங்கு
தொட முன்னே நோகுதம்மா
தட்டந் தனியே நீ பட்டியிலே பால் எடுத்து
பால்த்தண்ணி தருகையிலும்
கிட்ட வந்து நில் என்றும் – கன்னம்
கிள்ளி நீ விட்டதெல்லாம் நெஞ்சினிலே நினைவிருக்கு
பள்ளிப் படிப்பெல்லாம் நான் முடிக்க  நீயிருந்தாய்..
துள்ளியல்லோ நான் வருவேன் பல்கலையில் படிக்கையிலும்
வெள்ளி மனம் நீயெல்லோ வேதனையில் தவித்திருக்க
அள்ளி அணைத்தங்கே ஆசை முத்தம் இட்டதுவும்
கள்ளம் கபடமின்றி எமக்காக சிரித்ததினை
இப்பொழுதும் நினைக்கையிலே ஏங்குதம்மா என் நெஞ்சு
பட்ட துயர் அத்தனையும் பக்குவமாய் திசை மாற்றும் எந்தாயே
தொட்ட துயர் இது உனக்கு எப்படித்தான் வந்ததுவோ?
விட்டு விட முடியவில்லை விடையில்லா கேள்வியதை
விட்டு விட்டாய் எம்மையெல்லாம் என்று ஒருபோதும் நினைக்க வில்லை உன் உயிர் உருவம் என்னருகே  இருக்கும் வரை உயிர் வாழ்வேன் உனக்காக  இறுதி வரை

உன் உயிரினுள் உறைந்த மகன் - **பிரார்த்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா....

அம்மாவின் கடைசி மகன்
கதறுவது கேட்கிறதா
சும்மா நான் இருந்து விட்டேன்
சுகம் கிடைக்குமென்றிருந்தேன்
இம்மா நிலம் பிரிந்து அம்மா – நீர்
செல்வீர் என அணுவளவும் நம்பவில்லை
எம்மை எலாம் தவிக்க விட்டு
எப்படித்தான் சென்றீரோ?

சொன்னபடி நடப்பேன்
என்னை நீர் நம்பிடம்மா
சின்னப் பெடியன் என்று
என்னை வளர்த்தெடுத்தாய்
உன்னைப் பிரியும் நாள் –வெகு
விரைவில் நம்பவில்லை
அன்னை உனைப் பிரிந்தேன்
ஆறுதில்லை என் மனது
இட்டலி, தோசை, வடை
இனிய பலகாரம்
கேட்டவுடன் முட்டையுடன்
இடியப்பம் தந்தவளே
கட்டிப் பிடித்து உன்னுடனே
கால் போட்டுக் கிடந்தேனே
எட்டிப் போய் விட்டாயே
எப்படி நான் ஆறுவது?
சுட்டித்தனங்களெல்லாம்
செய்தேன் பொறுத்திருந்தீர்
கெட்டித்தனமாய் படித்திடடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுரைத்தீர்
பட்டிப் பசுப் பாலை
கறந்து பருக்கிடுவீர்
முட்டுதம்மா கண்ணீர்
மூச்சு விட முடியவில்லை
வட்ட முகத்தழகே
வாரியணைத்தவளே
தொட்டதெல்லாம் துலங்க
கிட்ட இருந்திடம்மா
பட்ட துயர் போதும்
பாசமுடன் காத்திடம்மா
கட்டியணைத்திடவே
உள்ளமிது ஏங்குதம்மா

கலங்கும் உன்
**- கடைசி மகன் நிதார்த்தன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயின் வேதனையில் ...

காலக்கொடுமைக்குள்
நோயுற்று உனை வருத்தி
காலன் சதியதனில் -- நல்
கோலம் உனையிழந்து
நீங்கா நீள் துயரில்
எனையிங்கு நிற்க விட்டு
நீங்கி விட்டாய் என் மகளே

ஐயிரண்டு மாதங்கள்
அன்னை நான் உனைச் சுமந்து
ஆளாக்கி உனை வளர்த்து
மெய்யழகு ஊட்டி
மெல்லிடையாள் உனையாக்கி – நல்
கணவனை கைப்பிடிக்க வைத்து
கடைசி வரை காத்து நின்றேன்
இரவு பகல் பாராது
என் மடிதனிலே வளர்ந்தவளே
அம்மா நான் இருக்கையிலே
அவசரம் ஏன் கண்ணே
வெண் மதியே என் மகளே – விலை
மதிப்பற்ற முழு நிலவே சின்னக் கைபிடித்து – நல்
சிறப்போடு வளர்த்தெடுத்து
அன்னம் தானூட்டி – உன்
அழகு நான் பார்த்து – என்
சின்னஞ் சிறியவளே – நீ
சென்றதேனோ தெரியவில்லை

நான்கு குஞ்சு பெற்றெடுத்து
நாடு போற்ற வளர்த் தெடுத்து – உன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம் போல் உருவாக்கி – இப்போ
உயிரற்று ஏன் போனாய்

அம்மா என் தவிப்பிற்கு – இனி
ஆறுதலாய் யாருண்டு
கண்ணில் வழிந்தோடும்
கண்ணீரில் நானிங்கு
மூழ்கி மூச்சடைத்து
பேச்சிழந்து நிற்கின்றேன்
என் மகளே உனையிழந்து

வண்ண நிலவு இன்று
வடிவிழந்து உருக்குலைந்து
தன்னைத்தான் வருத்தி
தரணி விட்டகன்றதேனோ?
அம்மா உனையெண்ணி
ஆர்ப்பரித்து நானிங்கு
நாவடைத்து நிற்கின்றேன் – நீ
துயிலுற்ற சேதியினால்

காலமுள் சுற்றவில்லை
கோயில் மணி ஒலிக்[illegible]ல்லை
தோகை மயில் ஆடவிலலை
தோப்புக்குயில் பாடவில்லை
நேற்றிரவு விடியவில்லை
ஆற்று நீர் ஓடவில்லை
காற்றெதுவும் வீசவில்லை
கண்மணியே நீ சென்றதினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிர் மகளே
என்றும் உன் ஆத்மா சாந்திக்காய்
எனையிழந்து தவித்திங்கு
இறைநோக்கி நிற்கின்றேன்
மீண்டுமொரு பிறப்பெடுப்பின்
என் மகளாய் நீ பிறப்பாய்
என்றும் உன் தாயாகி
இருக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

உன் உயிர் தாய்
**- இராசேஸ்வரி -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையவனின் இதயத்தில் ..

ஒரு வயிற்றுக் கொடியினுள்
இரு உயிராய் பிறந்தவர் நாம்
ஈருயிராய் இருந்தும்
ஓர் உருவாய் நின்றவர் நாம்

கெந்திப் பிடித்தேன்
அக்கா உன்னோடு
கிளித்தட்டு மறித்தேன்
மணல் வீடு கட்டி உம்மோடு மகிழ்ந்து திரிந்தேன்
வண்ணாத்திப் பூச்சியும் வாய்க்கால் கெழுத்தியும்
வயல் பாத்தியும் ஓடிப் பிடித்தும்
ஒளிந்து திரிந்தும் இளமை பருவத்தை
இன்பமாய்த் தொலைத்தோம்

நாட்கள் நகர்ந்து ஆண்டுகள் உருண்டன
இடைதனில் எங்களின் பிரிவு
ஆருயிர் அக்கா
நீ ஒரு கோயில் அன்பெனும் தெய்வம்
தினமுனைத் தேடும் என்மனம் நாளும்

மனமது இணைந்து
மஞ்சத்தில் கலந்து
அருங்கனி நான்கை அழகுறப் பெற்று
இனிமையாய் வாழ்வை இன்புறக் கழித்து
வளமுடன் வாழ்ந்து
உன் குடும்ப உயர்வுக்காய்
உருக்கினாய் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஞ்சா என்று என்னை
அன்பாய் அழைப்பாய்
நின்றாய் அருகில் -- என்றும்
என் நினைவின் மடியில்
அன்பின் உருவமே
அக்கா எனும் அழகு சொரூபமே
சென்றாய் இன்று – என்னை
தெருவினில் விட்டு
நெஞ்சு வெடித்து – என்
நினைவைத் தொலைத்து
கண்கள் சோர்ந்து
கனக்குது மனது

கனடாவில் இருந்து
கதைக்கும் போது
ஒன்றும் நடக்கா உனக்கென்று சொன்னாய்
நாட்கள் நகரும்
நான் நலம் பெறுவேன் யோசிக்க வேண்டாம்
உடம்மை பாரடா உனக்கும் வருத்தம் – என்று
உருகி நிற்பாய்
செல்வி பிள்ளைகளை நலத்துடன் பார்
அக்கா வருவேன் உன்அருகினில் விரைவில்
அது வரை அம்மா உனக்கு ஆறுதலாய் இருப்பா
சுகரடா உனக்கு சுத்தித் திரியாமல்
செல்வி சொல் கேட்டு நடந்து
வீட்டில் இருந்து நலம் பெறு என்றாய்

நேற்றிரவு மூச்சடைத்து
திடுக்கிட்டு நான் முழித்தேன்
என்னருகில் நீயிருந்து என் தலை தடவிக் கொண்டிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்விக்குச் சொல்லாதே – நான்
சென்று விட்ட செய்தியினை
கேள்வியவள் பட்டு விட்டாள்
நாதியற்றுப் போய் விடுவாள்
மென்மை மனத்துடையாள்
என் தம்பி உனக்கு இணையாள் மனைஅவளாள்
கயானனி, யாழினி, பிரணவன் – அவர்
கண்கலங்க வைக்காதே
அத்தை நான் அகன்ற சேதி
அவர்களுக்குச் சொல்லாதே
அழுது அவள் புலம்பிடுவாள்
ஆதலினால்.......... விட்டு விடு

என் உயிர் அக்காவே
எனக்கு மீண்டும் வேண்டும் நீர்
ஏழேழு ஜென்மமும்
இறந்திடா வரத்துடன் பிறந்திடும் அக்காவே

துடுப்பிழந்த படகாக
உனையிழந்து நானிங்கு
துடிக்கின்றேன் தனிமரமாய்
பாய்மரக் கப்பல் ஒன்று
புயலடித்துச் சாய்ந்தது போல்
மனம் இறுகி நானிங்கு
மரணித்துப் போகின்றேன்.

நீள் துகிலில் நீ சென்றாய்
நிம்மதியாய் நீயுறங்கு
நானிருந்து பார்க்கின்றேன்
நான் வாழும் நாள் வரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உயிர்கள் அனைவரையும்
கண்ணை இமை காப்பது போல்
தம்பி இவன் காத்திடுவான்
நிம்மதியாய் நீயுறங்கு
எந்தன் உயிர் அக்காவே
என்று உன் ஆத்மா சாந்திக்காய்
எனை வருத்தி ஏங்கி நின்று
இறையடி ஏந்துகின்றேன்.

உயிர் தம்பி
**- றஞ்சன் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதவிப்பு

அன்புக்கு இலக்கணமாய்
அவதரித்த என் மச்சாள்
நெஞ்சு நிறை நேர்மையினால்
பிஞ்சுமுக வடிவழகால்
பிறர் போற்றும் திருமகளாள்
என் அன்புநிறை கலா மச்சாள்
ஏன் மறைந்தீர் எமை [illegible]டு
எந்தன் மனம் வெந்து
ஏங்கித் தவிக்கிறது
எனக்கிருந்த சொந்தமொன்று
அன்புருவே நீயொருத்தி

நெஞ்சற்ற காலனவன்
நின்தனைப் பிரித்தான்
சொந்த மண்ணை விட்டகன்று
தூரதேசம் வந்தவள் நான்
மீண்டும் நான் வருகையிலே
நீயிருப்பாய் என்றிருந்தேன்
அன்பு மச்சாள் உன் பிரிவால் – மனம்
அழுது வடிக்கின்றது ஆர்ப்பரித்துக் கொள்கிறது

கடைசிநேரத் தொலைத்தொடர்பு – நீ
கண்விழித்தாய் என்று சொன்னாய்
செல்வி நீ கலங்காதே – என்
சொல்லுப் பலிக்குமென்றாய்
எண்ணியெண்ணி விம்முகின்றேன் – நீ
ஏமாற்றிச் சென்றதனை
அக்கா என்றுன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனே அழைத்து வந்தேன்
தங்கையெனை எண்ணாமல் – இத்
தரணி விட்டு அகன்றதேனோ?

புண்ணியம் செய்தவள் நீ
போய்விட்டாய் தனிமையிலே – நாம்
பண்ணிய பாவமென்ன – எமை
தள்ளி வைத்துச் சென்றதேனோ?
கண்ணிமைக்கும் நேரத்தில்
காணாமல் சென்றவளே
புண்பட்டு என்மனது
புலம்பிக் கிடக்கிறது
நானிருக்கும் நாள் வரையும்
நீயிருப்பாய் என்னிடத்தில்
கால நீள்துயிலில்
சென்று வா என் மச்சாள்
உன் ஆத்ம சாந்திக்காய் இறைவனிடம் வேண்டி நிற்பேன்

**- மைத்துனி செல்வி -**

**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமனார் மனத்தவிப்பு

என் அன்பு மருமகளே
முழு நிலவின் திருமகளே
பிஞ்சு முக அழகுடையாள் – நல்
நெஞ்சுடை குணமுடையாள் – தன்
குடும்பம் சிறக்கவென்று
தனை உருக்கி ஒளி கொடுத்தாள்
நெஞ்சு பொறுக்கவில்லை – இப்போ
நீ சென்ற சேதியினால்

பருத்தி விதை உடைந்து
பஞ்சாகிப் பறந்தது போல்
கிறுக்கி நீ ஏன் சென்றாய் – எம்
மனதை உருக்கி விட்டு
மாமா என்று என்னை – நல்
மனதுடனே அரவணைப்பாள்
பண்புடையாள் நல் மனையாள்
பகுத்தறிவு குணமுடையாள்
உதவிக் கரங் கொடுக்கும்
உத்தமியாள் என மருகளாள் – என் நெஞ்சு
மறுக்குதம்மா நீ அற்ற செய்தியினால்

கூன் விழுந்து கண் இருண்டு
கோலக்களையிழந்து
ஊன் உருகி ஒளி மங்கி – நான்
உயிரோடு இருக்கையிலும்
காலனவன் கண்ணுக்கு
ஏன் பட்டாய் என மருமகளே – என்
உயிரைக் கேட்டிருப்பின் – மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவந்தளித்திருப்பேன்
உன்னை ஏன் கவர்ந்து சென்றான்
உணர்வற்ற அரக்கனிவன்
இன்னும் நான் இருக்கையிலே
எப்படி நீ சென்றாய்
என் கட்டை எரியுமுன்னே
உன் நெஞ்சில் ஏன் கட்டை
நெஞ்சடைத்து நிற்கின்றேன்
நீ சென்று மறைந்ததனால்
என்றும் உன் ஆத்ம சாந்திக்காய்
இறைவேண்டி நிற்கின்றேன்

**- மாமா கந்தையா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமியார் மனக்குமுறல்

வானத்து முழுநிலவு – ஏன்
வர மறுத்தது
காலத்துச் சக்கரம் – ஏன்
கண் மூடிக் கொண்டது – நரி
ஊளையது கேட்ட போது – என்
உயிரது செத்தது
ஒரு போதும் எண்ணவில்லை
உன் மூச்சு விட்டது
ஏனம்மா நீ சென்றாய்
என்னன்பு மரு +மகளே
மாமியெனை எண்ணாமல் – இப்
பூமிதனை விட்டகன்றாய்
பாவி மனம் வேதனையில்
பேதலித்துக் கிடக்கிறது
பரதேசியாகி என் மனது
பரிதவித்துத் துடிக்கிறது
கோலத்து மயிலழகாள் – நல்
குணத்தழகாள்
அன்புடையாள் அழகுடையாள் – நல்
அரவணைக்கும் பண்புடையாள் – இப்போ
காலனவன் கொடுஞ் செயலால்
காவுற்றான் உனையம்மா
நோயுற்று என் மனது
நொந்து போய்க் கிடக்கிறது
நீயற்று என் நெஞ்சு அடைத்து வெடிக்கிறது
அன்புருவே எனதருமை மருமகளே
என்றும் உன் ஆத்மா சாந்திக்காய்
இறைவனிடம் வேண்டுகின்றேன்.

**- மாமி பொன்னம்மா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகளுக்கு ....

என் நாடித் துடிப்பு அடங்கவில்லை – ஏனெனில்
என் சுவாசம் நீ என்பதால்

என் மூச்சு நிற்கவில்லை – ஏனெனில்
என் இதயம் நீ என்பதால்

என் நிலவு தேயவில்லை
என் வானம் நீ என்பதால் – இப்போ

என் உலகம் சுற்றவில்லை – ஏனெனில்
என் **இயக்கமே** நீ என்பதால்

**- கவி அப்பா -**
**பிரான்ஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனி, மைத்துனன்மார் குமுறல்கள்

அன்பு வழிகாட்டி
அரவணைத்து சீராட்டி – எம்
குடும்ப மூத்த ஒளிவிளக்காய்
ஒளி தந்து உயிர் தந்தாய்

பொன்னுருகும் அழகு முகம்
பொலிவுடைய திருவதனம்
அன்பு நிறை உன் இதயம்
அளவற்ற கருணை மனம்
இப்போ ....................
எங்கு சென்றாய் எங்கள் அண்ணி
எம்மவரை எண்ணாமல்
திங்களது வானமதில்
திசையகன்று சென்றது போல்
எம்தன் உயிர் அண்ணி நீங்கள்
இடைநடுவில் சென்றதேனோ
பொங்கலன்று மழை வந்து
புதுப்பானை உடைந்தது போல்
நெஞ்சுடைந்து நிற்கின்றோம்
நின்முகம் காணாமல்
இன்னவளாள் பிரியசாந்தா
இறையடைந்த அன்பின் சிவா
இடமகன்ற மகேஸ், கருணா
இறுகி நிற்கும் குகா, பிரபா
அன்னவரை எண்ணாமல் – நீர்
சென்றதேனோ சொல்லும் அண்ணி
என்ன குறை நாங்கள் செய்தோம்
இடைநடுவில் நீர் பிரிய
நீரற்ற வனம் போலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலற்ற மரம்போலே
நீரற்று நிற்கின்றோம்
கண் திறந்து மீண்டுமிங்கு
கை சேர மாட்டீரோ?

மைத்துனர்கள் மனக்குமுறல் – உன்
மனத்திடையே சேராதோ?
அன்பு நிறை தாய் போலே
அருகிருந்தாய் எம் அண்ணி
எண்ணியெமை நோக்காமல்
இறையடி இணைந்தீரோ?

எம் அண்ணன் அவர்களுக்கு
இணைபிரியா நல் தோழியாய்
மஞ்சத்து நல் மனைவியாய்
மனம் நிறை தாயாய்
இருந்தருகில் காத்து நின்றீர்

அன்பு நிறை செல்வங்கள்
அருங்கனிகள் நான்கினையும்
துன்பச் சுமை நடுவில் தள்ளி விட்டு
தூரத்தே பறந்ததேனோ?

இன்று நீர் எமை விட்டு பிரிந்தாலும்
எம் அண்ணி உம்மிடத்தில்
எம் கடன் பணி செய்துகிடப்பதே
எம் மூச்சு உள்ளவரை
நெஞ்சிறுகி நின்றிங்கு – உம்
ஆத்மா சாந்திக்காய்
இறையடி ஏந்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் தவிப்பு

நல் கூட்டுக் கிளிகள் போல்
நாமிருந்தோம் கலா அக்காவே
கூடு விட்டு நீர் பறந்து – எமை
குற்றுயிராய் விட்டதேனோ?
ஓடி வந்து உதவி செய்யும்
உரிமையுடை கலா அக்கா

தேடி நாமலைகின்றோம் – நீர்
சென்ற திசை நோக்கி
அன்புடையாள் கோணேஸ்வரி
பண்புநிறை பவானி
பாசமது பவா
சத்தியவாள் வித்தியா
நித்திலத்தாள் கவிதா
தங்கையர்கள் எமை விட்டு
எங்கே நீர் சென்றீரோ?
எம் கை இணைப்பறுத்து
இடைநடுவில் ஏன் பிரிந்தீர்
கூடி நாமிருந்து
குழைத்து வைப்போம் – பழஞ்சோறு
ஆடிக்கூழ் காய்ச்சி
அன்புருகி அருகிருந்தோம் – இப்போ
ஓடி நீர் போனீர் – எம்மை
ஒதுக்கி வைத்து விட்டு
தேடித்திரிந்தலைந்து
நாதியற்றுப் புலம்புகின்றோம்
அன்புச் செடி வளர்ந்து – அது
மரமாகிக் கனிந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமுன்னில் காலனவனேன் வந்தான்
கண்ணற்ற மடையனவன்

வேதனையில் நாமிங்கு
விம்மித் தவிக்கின்றோம்
எங்களுயிர்க் கலா அக்கா – வரும்
திங்களன்று வருவீரோ
குங்குமப் பொட்டு வைத்து – நல்
கூறைப் பட்டுடுத்தி
எங்களக்கா நீர் வந்தால்
எம் கண்ணே பட்டு விடும் – எமைப்
பட்ட மரமாக்கிப் பறந்து விட்டாய் இத்தோடகன்று
சித்திரம் தான் கலைந்து
சென்றதோ இவ்வுலகை விட்டு
பத்தரை மாற்றுத் தங்கம் – நீள்
நித்திரைக்குச் சென்றதுவோ

விம்முகின்றோம் கதறுகின்றோம்
வேதனையில் குமுறுகின்றோம்
மீண்டும் நீர் வர வேண்டி
வழி நோக்கி நிற்கின்றோம்
என்றும் எம் அக்கா சாந்திக்காக
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

தங்கையர்கள்

**– கோணேஸ், பவானி, பவா,**

**வித்தியா, கவிதா –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனன் கிருபா மனத்தாங்கல்

நேற்றுவரை நான் நினைத்ததில்லை
காற்று அது நிற்குமென்று
ஆற்று நீர் உடைந்து
ஆழ அது பாயுமென்றும்
வீட்டின் தலை விளக்கு
விடியலற்று அணையுமென்றும்
இதுவரை நான் எண்ணவில்லை

சோற்றுக் குழையலுக்கு
சுற்றித் திரிந்தவன் நான் – உம்
வீட்டுப் புகட்டடியில்
விழுந்து கிடந்தவன் நான்
ஐயா அடிக்கையிலே
அருகிருந்து தடுத்திருந்தீர்
அம்மா கலைக்கையிலே
ஆறுதலாய் நீரிருந்தீர்
அண்ணனவர் அதட்டுகையில்
அலட்சியமாய் கண்ணசைப்பீர்
அன்புதனை அள்ளித் தந்தீர்
அரவணைத்து எனை வளர்த்தீர்

பொறிக்கடவை அம்மனுக்கு – எனக்காக
பாற்செம்பு தான் எடுத்தீர்
ஊட்டி வளர்த்தெம்மை
ஊக்குவித்த தாய் நீரே – இப்போ காட்டும் குறியாகி
கண் மூடிக் கொண்டீரோ
நான் பாட்டிசைக்கும் போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கபலம் நீர் இருப்பீர் – என்
நாட்டுக் கூத்திற்கு நடையெடுத்துத் தந்திடுவீர்
சாந்தன் குலசிங்கம் அண்ணர்
உந்தன் திண்ணையடி
உங்கள் சமையலுக்காய்
உண்ணாமல் காத்திருப்பார்

நேற்று மழையடித்த
சேற்றில் வளர்ந்தவன் நான்
கூட்டுக் குடும்பத்தில் – ஒர்
நாற்றாய் இருந்தவன் நான்
அறுவடை ஆகும் முன்னே – உனை
அறுத்தாய் ஏன் அண்ணி
உன் கருவறுத்த காலனவன்
என் கையினிலே கிடைத்து விட்டால்
அவன் உயிர் அறுத்திங்கு – உன்
ஆவிதனை மீட்டிருப்பேன்

எம்குடும்பம் செழிக்கவென்று
உம் குருதி இறைத்து வந்தீர்
அண்ணனவன் செயல்களுக்கு
அனைத்துமாய் நீரிருந்தீர்
நெஞ்சிறுகி நானிங்கு
நினைவிழந்து கிடக்கிறேன்– உன்
கடைசி நாள் காணாது
கனத்துத் தவிக்கின்றேன்
என் உடல்நிலையை மறந்து விட்டு பறந்து வரத் துடிக்கின்றேன். மீண்டும் உன் வரவிற்காய் வழியருகே காத்து நிற்பேன். உம் ஆத்ம சாந்திக்காய் இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

**– விக்கி – கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகன் மனத்திடையே..

எழுத இயலவில்லை
என்னால் எழுத இயலவில்லை
அத்தை உனையிழந்த பின்பும்
எதை நான் எழுதுவது
ஒன்றிரண்டா எழுதுவது
உமையெண்ணி நானிங்கு
நினைவு தொட்ட நாள் முதலாய்
நின்றிருந்தேன் உம்மருகில்
நெஞ்சுருகி நானிங்கு
உயிர் பிரிந்த உணர்வோடு
உருக்குலைந்த மனதோடு
கருச்சிதைந்த வலியாக – மனம்
கனத்துக் கிடக்கிறது

தும்பு மிட்டாய், தோடம் பழஇனிப்பு,
பனங்கிழங்கு, வாழைப்பழம்,
சூப்புத்தடி, தட்டுவடை,
அவித்த கச்சான், அன்னமுன்னா
எனக்களிப்பீர் அன்பினிலே
இரணைமடுப் பாமினிலே
ஆட்டிறைச்சி, மாட்டிரல்,
பொரிச்சமுட்டை, இராசவள்ளி – என்
பள்ளிக்கூட விடுமுறையில்
அள்ளித்தந்த அன்பினத்தை
நெஞ்சிருக்கும் நாள் வரையும் – உம்
நினைவு தனை சுமந்திருப்பேன்
அன்பு உருகி நின்றிருந்தீர் – நல்
ஆறுதலாய் நீரிருந்தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் குடும்ப நல் விளக்காய்
ஒளி தந்து உயர்ந்திருந்தீர்
உம்முடைய சிரிப்பழகில் – எம்
உயிர் எங்கோ சென்று வரும்
புன்முறுவல் பூத்தமுகம் – நல்
புதுக்கவிதை எந்தன் அத்தை

ஆலமரம் வேரறுந்து
அடியோடு சாய்ந்தது போல்
குடிசையது தீப்பட்டு
நீறாகிப் போனது போல்
ஒன்றுமே புரியவில்லை
உமையிழந்து நாமிணங்கு

ஈரிரண்டு அருங்கனிகள்
இவ்விடத்தே ஈன்றெடுத்து
சீரோடும் நல் சிறப்போடும்
ஊர் போற்ற வாழ வைத்து – இவ்
ஐ பத்து மூன்றினிலே
அவசரமாய் ஏன் சென்றாய்?

தென்னை மரம் நல் வளர்த்து
செழித்திளநீர் தருகையிலே
வேளாண்மை அது வளர்ந்து – நல்
விதை தரும் வேளையிலே
எண்ணமொழி ஏதுமின்றி
இறையடி ஏனிணைந்தீர்?
சொல்ல மொழி தெரியவில்லை – இத்
துன்பக் குவியலுக்குள்
எண்ணியெண்ணி விம்மி மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுகிப் போய்க்கிடக்கிறது
அத்தை உம் பிரிவாலே – மனம்
அடைத்து வெடிக்கிறது.

வெள்ளியிட்ட கோலமது
மறைந்து போய்க் கிடக்கிறது
வாரிவிட்ட உன் கூந்தல்
கலைந்து போய்க் கிடக்கிறது
குங்குமம் அது மறைந்து
குழம்பிக் கிடக்கிறது
மஞ்சளிட்ட உம்மழகு
மங்கிக் கறுக்கிறது

உன்னன்புக் கணவனிங்கு
உருகித் துடிக்கின்றார்
நீ பெற்ற பிள்ளைகளோ
நினைவற்றுத் தவிக்கின்றார்
கண்ணிருந்தும் குருடனைப் போல் – உனை
காணாமல் நிற்கின்றோம்
காலனிட்ட கண்ணிதனில்
ஏன் விழுந்தாய் எந்தன் அத்தை
என்னுமொரு பிறப்பெடுப்பின்
இவ்விடமே வந்து விடும்
எம்மிடத்தில் வந்திங்கு
அன்பு மழை தந்து விடும்
ஒன்றிரண்டா சொல்லி விட
உனைப்பற்றி என்னத்தை
எழுதவரி வருகுதில்லை – உன்
ஏக்கத் தவிப்பினிலே உன் ஆத்ம சாந்திக்காய் இறையடி வேண்டுகிறேன்.

**– சுரேஸ் – கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனன் கருணாவின் வேதனை

கருணை நிறை ஒளிப் பிழம்பாய்
தரணியிலே வந்துதித்து
பரணி போற்றும் நல் மகளாய்
எம்குடும்பம் இணைந்தவரே
எம் மூத்த அண்ணனவன்
கரம் பிடித்த அண்ணி நீங்கள்
அண்ணி மட்டுமல்ல நீங்கள்
அன்புருகும் தாய் நீரே

சின்ன வயதினிலே – நான்
சிணுங்கி அழுகையிலே
பல்லிமிட்டாய் தந்தெனக்குப்
பாடம் சொல்லித் தந்தாயே
உணர்வூட்டி சீராட்டி
உயிரூட்டி எமை வளர்த்து – இப்போ
பாடையிலே படுத்துறங்கிப்
பரதேசம் போனதேனோ?

நெஞ்சு வெடித்திங்கு
நின்று நான் அழுகின்றேன் – உன்
கண்கள் திறந்திங்கு
கருணாவைப் பாரீரோ?
சோலையது செழிப்பிழந்து
வாடிக்கிடக்கிறது – உம்
பட்டுக்கூறை கசங்கி
குழம்பிக் கிடக்கிறது
தூரத்தில் நானிருந்து – பெரும்
துன்பத்தில் விம்முகிறேன் – என் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத்தை இறக்கி விட
பார் மீண்டும் வாரீரோ

மேகமது கறுக்கையிலே
மழை பெய்யுமென்றிருந்தேன் – ஆனால்
இடிவிழும் என்தலையில்
என்று நான் நினைக்கவில்லை – எம்
உயிர்ச்சக்கரமொன்று
உருண்டு கழன்றோட
கன்றின் மேலேறிய
தேர் போலாச்சு என் மனது
மனம் வெடித்து வேதனையில்
மரத்துத் துடிக்கிறது
உரமற்ற பயிர் போலே – என்
உளமெரிந்து கருகியது
தூரத்தேயிருந்து – உம்
பாதம் மலர்தூவி – உம்
ஆத்மசாந்திக்காய் இறைவனிடம் வேண்டுகின்றேன்.

**- மகேஸ் -**
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயருக்குள் ...

எமது அன்பு நிறை கலா அத்தை நீர் எமை விட்டகன்று இறையடி இணைந்து விட்டீர். ஏற்றுக் கொள்ள முடியா உம் இறப்பின் வேதனைக ளுள் இன்று நாம் இறுகிப் போயுள்ளோம். எமை விட்டகன்று எமக்கு சொல்லொணாத் துயரத்தில் இட்டுச் சென்று விட்டீர்.

மனிதப்பிறப்பின் மகத்துவத்தின் எம் குடும்ப நல் மகுடமாய் இருந்து அன்பு கொடுத்து ஆறுதல் கொடுத்து அயராது உழைத்தும் எமை அரவணைத்தும் இருந்தீர்கள்.

எழுதிட முடியா வார்த்தைகளுக்கப்பாற் பட்டவர் நீங்கள். எங்கள் அன்பின் அத்தை. கால ஓட்டத்தின் கொடுமையிலும், விதியதன் விளையாட்டிலும் எம் அத்தை உமை நாமிழந்து தவிக்கின்றோம். இவ் இழப்பு எவராலும் ஏற்க முடியாத ஒன்று. உம் இறப்பின் இழப்பால் கடவுள் கூடக் கண்ணீர் வடிக்க வேண்டும். ஏனெனில் பதுமை நிறை பெண்ணாக இப்பரணியில் வாழ்ந்தவர் நீர். எப்படிக் காவுற்றான் இரக்கமற்ற எமன் அவன். உம் நீங்கிடா நினைவுகள் எம் நினைவுக்குள். எம் நினைவு அஞ்சலியை சமர்ப்பணம் ஆக்குகின்றோம் எம் குடும்பசகிதம்.

உம் பிரிவால் துயருறும்

**ரமேஸ் - சிவா**

**ஜெகன் - பிரியா**

**தர்மா - வித்தியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனை சுமந்து ...

என்றும் எம் குடும்ப அகல்விளக்காய் நல்லொளி காட்டி. நாவுற ஊட்டி, எம் அண்ணன் வாழ்வில் பெருநல் விருட்சமாய் இருந்து, இரவு பகல் உனை வருத்தி, கண் விழித்து காத்து நின்று, தடம் புரண்ட வாழ்வுச் சக்கரத்தில் உனையிழந்து நாம் இன் று நிலை குலைந்து நிற்கின்றோம். நீங்கிடாப் பிணிக்குள் உமை வருத்தி தாங்கிடாத் துயர் சுமந்து ஏங்கிட எமை வைத்து நீள் தூக்கத்தில் சென்று விட்டீர். மனம் குமுறும் வேதனைக் குள் நாம் மருண்டு போய்க் கிடக்கின்றோம். எம் ஆருயிர் அண்ணி இதுவரை காலமும் எமக்கோர் தாயாக இருந்து அன்பு வழிகாட்டினீர். எம் குடும்ப நிகழ்வுகளுக்கு உயிர் வளர்த்து உணர்வூட்டி நற்பெருமை சேர்த்துத் தந்தீர். ஏற்க முடியவில்லை உம் இழப்பை எம்மால். எத்தனை இடர்களில் பக்குவமாய் இருந்து விட்டு எப்படி இப்போது இப்படிச் சென்று விட்டீர்.......... காலன் அவன் பெரும் கயவன் உன் முகம் பார்ப்பின் உருக்கிடுமே மனது. எப்படி உயிர் எடுத்தான் இரக்கம் அற்ற கொடியோன். உம்முடைய பிரிவு வேதனைக்குள் உடைந்த மனதுடன் தாங்கிடாத் துயர் சுமந்து உன் சாவுக்குள் நாம் வாழ்கின்றோம். என்றும் உம் ஆத்ம சாந்திக்காய் எம் குருதியதைக் கொடுத்து இறைவனை வேண்டுகின் றோம்.

உம் பிரிவின் வேதனையின் உறவுகள்

**குகா - வித்தியா குடும்பம்**

**பிரபா - கவிதா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு(ப)கலா

அன்பான முகத்துடனும்
மாறாத சிரிப்புடனும்
அன்றிலாய் வாழ்ந்து வந்தீர்
மீளாத்துயில் கொண்டதேனோ?

சிங்காரச் சின்ன மகள்
சென்ற இடம் வேண்டுமென்று
சீக்கிரமே கூடு விட்டு
சிறகடித்துப் பறந்ததேனோ?

காலம் தவறா காலனவன்
கண்ணியமாய் தன் கடமையிலே
கவர்ந்து சென்றான் உங்களையே
கதிகலங்கி நாம் நிற்கின்றோம்

காணச் சகிக்கவில்லை – உந்தன்
காதல் கணவன் முகம்
கண்ணீரில் மிதக்கிறார்கள் – உன்
கண்ணான கண்மணிகள்

கலங்கித் தவிக்கின்றோம் – உம்
சொந்தம் பந்தங்கள்
கடவுளை வேண்டுகின்றோம் – உம்
கனிவான ஆன்மா சாந்தி பெற

நெஞ்சில் அழியா நினைவுகளுடன்
**- தம்பையா மாமாவும் குடும்பத்தினரும் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளமும் அரவணைப்பும் .....

வாழ்வே சோர்ந்தொடுங்கி
வதங்கிப் போய்க் கிடக்கிறது
எங்களின் விதியே!!!?
எம் வாழ்வின் ஒவ்வோர் அடியையும்
தூக்கி வைக்க
எத்தனை விலை கொடுத்தோம்
அத்தனையும் போதாமலா
பெரியம்மாவைப் பலி எடுத்தாய்?
வாழ்தலுக்கான எங்களது
வேண்டுதலுக்கும் மேலானதா
கொல்வதற்கான உனது தேவை?
பெரியம்மா!!!
நீங்கள் இல்லாத வெளியை நிரப்புவதற்கு
நாங்கள் அறிந்தவரை நம்மிடத்தில்
யாருமில்லை......

எம் காலத்தில் இனி என்றும்
உங்களைப்போல்
அன்புளமும் அரவணைப்பும்
நிறைந்தூறும் பெரியம்மாவை
கண்டிடவே இயலாது ........
ஆளாளைப் பார்த்து
அனுதாபம் சொன்னபடி
மீளேலாத் துயர் தோய்ந்து
அணுவணுவாய் அனுபவிக்கும்
எம் பெரியப்பாவோடும்
எம் சோதரரோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழறியழ முடியாமலும்
ஆற்றுப்படுத்த முடியாமலும்
தூர தேசத்தே துடிக்கின்றோம்....
பெரியம்மா!!!!
கண்ணீர் தவிர சமர்ப்பிக்க
ஏதுமில்லை எங்களிடம்............
உங்கள் ஆத்மா கவினோடு சங்கமிக்கட்டும்........

உங்கள் பிரிவால் துயருறும்
**சிவ - ரதீசியா**
**ரதீபன்**
**ரதீபா**
**சங்கீர்த்தனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# We Miss You..

Perriamma when I first met you was in 2010 ,me my sister and my mom came to Sri-lanka to visit family. As i came through the gates to your house i seen a big palace i said " that's really big place" then I realized that was your caring husband (perriappa) hotel ,as we passed that we entered your home and i seen you for the first time and the care ,love and passion you gave me is unforgettable perriamma .In the first 20 minutes ,you gave me neethans shirt saying in "Sri-lanka nobody wears big shirts like this" and you gave me a shirt that fit me perfect you taught me how to look around others so people won't judge while i was visiting, thank you perriamma . Every time I go anywhere in Sri-lanka to visit any one I always like coming back to your house because i always have so much fun and unforgettable memories . As I am writing there is so many things coming to my mind that we shared together and did ,when you and perriappa where talking to each other i started laughing in the middle for no reason and you asked me why am I laughing and I had no idea why ,you and perriappa reminded me of so many things.

I feel so much pain thinking of all these memories we had my heart is burning that now i am unable to make more un forgettable memories with my perriamma .When me pirarththan and neethan were outside talking to each other we entered the kitchen and you and appama were making some delicious food so while you were making this meal ,a frog jumped on your head and you started to yell, you were so scared about it, we all started laughing together ,I miss all these memories we had perriamma



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i want to see you smile again perriamma ,you have the most beautiful smile and you probably heard it a lot ,I want to talk with you perriamma .You are a real strong women while you were going through all this pain for the couple of months ,you took good care of your kids my brother and sister ,you have raised amazing kids ,perriamma. I know this is a real hard time for perriappa and neethan , pirarththan,yatha akka but as you raised them as strong people ,you will never leave there hearts. i want to see again ,I want to see smile i want to get the love and efficient care that only you gave me ,I miss you perriamma .I will never forget you will always be with us perriamma.

**- Love V.Malatavan -**

(Canada)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் தாங்கல்

எம் மூச்சின் முழுப் பலத்தையும் உமக்களித்து தோற்றுப் போய் விட்ட துயரச் சுமைக்குள் நாமிப்போ. நீ நோயுற்ற நொடியில் நாம் பேச்சிழந்து போனோம். தாயற்ற சேய் போல் தவித்தழுதோம். கோவில் குளமெலாம் கூடியலைந்தோம். எம் நாடித்துடிப்பெலாம் நீயாகவே இருந்தாய். கனவில் கூட காண முடியாத காலனின் கொடூரத்தால் உன் நெடுந்தூரப் பயணத்தில் களைப்படைந்து கண் மூடிக் கொண்டாய். நீ சிறகுகள் விரிக்க முன்னே வேட்டையாடப் பட்டாய். இக்கொடுமையின் வலிக்குள் நாம் குமுறிப் போயுள்ளோம். உயிர் கொடுத்து உதவலாமென நியதி இருந்திருப்பின் விதியினை மாற்றி அதைக் கூட உவந்தளித்திருப் போம். ஏனெனில் விலை மதிப்பற்ற அழகு பொக்கிஷம் நீ. மனமறிந்து பழகும் அன்பின் மகுடம் நீ. எம் நினைவுகளையெல்லாம் தின்று விட்டு இம் மண்ணை விட்டுச் சென்று விட்டாய். புண்ணியத்தின் பயனால் நீ எண்ணியதையெல்லாம் அடைந்தும் அடைய முன்னும் அகன்றாய் இவ்வகிலம். எம் அன்பான அமைதிப் பூவே உன் ஆத்மா என்றும் எம் அன்பு அரவணைப்புக்குள் அடங்கியிருக்கும். நீ அமைதியாக உறங்கிக் கொள். உன் ஆத்மா சாந்தி வேண்டி நிற்கின்றோம். இறைவன் அவன் இருப்பின்!

**காங்கேசன் பெரியப்பா, பெரியம்மா,**
**பிள்ளைகள், மருமக்கள் குடும்பத்தினர்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

அன்பின் திருவுருவே...

ஆருயிர் நண்பன் கணேசலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் துணையாக வாழ வந்த நாள் முதலாய் அறிமுகமாகி உடன் பிறவாச் சகோதரியாய், உத்தமியாய், பண்போடு பழகி, நயத்தோடு பேசி, நல்லதையே உரைத்து இன்முகம் காட்டி நல்விருந்தோம்பி எமை உபசரித்தாய். மற்றவரை மதித்தாய், சினந்துரையாய், சிரிப்பாய், குறிப்பறிந்து சற்றேனும் தாமதியாது வற்றாது உதவி செய்யும் தாயுள்ளம் கொண்ட உன்னை மண்ணுலக வாழ்வில் இருந்து வெகு சீக்கிரத்தில் விண்ணுலகம் அடைந்து விட்ட துயரச் செய்தி கதிகலங்க வைத்து விட்டது எமை ... இவ்விழப்பின் பால் துயருறும் நண்பனுக்கும், நண்பன் குழந்தைகளுக்கும் எம் குடும்பம் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**- அண்ணன் சற்குணானந்தன் குடும்பத்தினர் -**

வெள்ளவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கு சென்றாயோ .........

அன்னைக்கு நிகராம் – எம்
எண்ணமெல்லாம் அன்பால்
நிறைந்த அருமை மைத்துனியே!
எப்பிறப்பெடுத்தாலும் உனைப் பேலொரு
உறவு இனி வந்திடுமோ!

பட்டினியாய் நாமிருந்த போதெல்லாம்
பாசத்தோடு உறவையும் – பக்குவமாய்
இவ்வுலகில் வாழ்ந்திடக் கற்றுத்
தந்தவரும் நீதானே!
உற்ற உறவாக உயிர்த்தாயாக
பக்குவம் நிறை பாசத்தின் பெரு விருட்சமே!
அள்ளியெமை அரவணைத்து ஆதரவுக்
கரம் நீட்டி ஆறுதலளித்த
பொழுதுகளை எண்ணியெண்ணி
ஏங்குகிறோம்!
ஏனம்மா உனக்கிந்த கொடியநோய்
கடவுளுக்கு உன்னில் விருப்பம் அதிகமோ!
அதனால் தான் கடவுளையும் கடிந்தாயோ!
எண்ணியெண்ணியே இதயமது கனலாகி
எரிகின்றதே கண்களிரண்டும் குளமாகி
கரைகின்ற விழிநீரில் தேடுகின்றோம்!
எப்பிறப்பில் காண்போம் – உனைப் போலொரு
இனிய மச்சாளை!
பரிதவித்து நிற்கும் எமக்காய் – மீண்டும்
வந்திடாயோ!
பிரிவால் துயருறும்

**-மைத்துனி கமலாதேவி குடும்பத்தினர் (சாந்தி) -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளில் ஒன்றென்பீர்

தாய் போல் உமை நினைத்து
நோய் தீர்க்கப் பாடுபட்டேன்
சேய் போல் எனையழைத்து
செய்தி பல சொல்லி வந்தீர்
நோய் வந்த போதினிலும்
நொந்து மனம் சோராமல்
தேயாத முழு நிலாவாய் – ஒளி
தந்தீர் புன்னகையால் இரவு பகல் பாராது
இதயம் வைத்துக் காத்திருந்தேன்
பரவியது நோய் விரைவாய்
பதைத்தேனே என்னிதயம்
பிறவியிது இல்லையெனப்
பிறந்திடுவீர் பிரணவமாய்
உறவே என் உயிர் அக்கா
உம் நினைவில் வாழ்ந்திடுவேன்
மனிதப் பிறவியில்லை – நீர்
மாதர் குல மாணிக்கம்
புனிதப் பிறவியம்மா – நீர்
பூவிலும் மென்மையம்மா
கனிவான வார்த்தைகளால்
காலமெலாம் இனிமை தந்தீர்
காயத்திரியும் உந்தன்
பிள்ளைகளில் ஒன்றென்றீர்
இனியெங்கு காண்பதம்மா
இதயமது ஏங்குதம்மா
மனிதப் பிறவியிது
மாயம் நிறைந்தது தான்

உயர் அன்பில் - **காயத்திரி - திலீபன் -**

வைத்திய அதிகாரி, றாகம வைத்தியசாலை, கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ வடிவம் அன்னை தான்

அன்பான தாயே – உன்
அழகான புன்னகை
அதைத்தானே நிரந்தரமாய்
நாம் தெய்வத்தைக் கேட்போம்
அழகின் அரசி நீ – அது
அகத்திலும் புறத்திலும்
அளவு கடந்திருந்ததே
என்னதான் நடந்தது உனக்கு – இதுவரை
யாருக்கும் புரியவில்லையே
புரியாத புதிராக இருந்தாயே தாயே
புரியும் உண்மை ஒன்றை
புரிய வைத்தாய் நீயே

சொல்லிலும் செயலிலும்
உன் அன்பான கண்டிப்புத்தான்
எமக்குப் பிடித்ததம்மா – ஆனால்
இறுதி வரை எமக்கு ஏதும்
சொல்லவில்லையே அன்னையே
உம் ஆசீர் எமக்குப் போதும்
என்றா தெய்வத்தை நாடினாய்
புரிந்தது ஒன்று மட்டும்
தெய்வ தரிசனம் தேடுகிறோம் – அது
தாயின் வடிவம் தான் என்பதை
மறந்து விட்டு......

என்றும் நினைவுடன்
**- மகள் சியாமளா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிவின் வலி

அத்தை உம் அன்பில்
அத்தனையும் நாம் அடைந்தோம்
நித்தம் உம் முகத்தை
பார்க்கும் சுகமிழந்தோம்
சுத்தம் நிறைந்த மனம்
சுடரொளிரும் உம் வதனம்
சித்தம் உம் நினைவால்
சிறைபிடித்தோம் எம் இதயம்
இத்தனையும் தந்தவரே
இதயம் அது இறுகி நின்று
இப்போது வாடுகின்றோம்

அன்பாய் மருமக்கள்
**- றஜீவன் , துஜீவன்**
**துரைராசா குடும்பத்தினர்**

## கலா....

புரிந்து கொள்ள முடியாத கவிதை அல்ல
அழகிய ஒரு பெண்..
அற்புதமான மனைவி
அருமையான தாய்
அன்பான சகோதரி
சமூகத்திற்கோர் குழந்தை
சித்திரை பௌர்ணமியில் தவமிருக்க ஆடி அமாவாசை நாட்களில்
பிள்ளைகளுக்கேன் வரம் ஈந்தாய் ..........

**-அண்ணா சந்திரசேகரம்** - பரந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அக்கா எனக்கு வேண்டுமே ....

அக்கா இறந்திட்ட செய்தி
மேகமே அழிந்தது போல் இடியாய் இடித்தது
இனிய முகம் இனிமேலும் இல்லையென ஏங்குகிறேன்
இருந்தாலும் இச்செய்தி பொய்யாகிட
மனம் எண்ணி தவிக்கிறது!

மனம் ஏற்கவில்லை உங்கள் மரணத்தை
உங்கள் சிரிப்பு பாசமொ யார் பகர்வார் – இனி
அக்காவின் உறவு முடிந்ததுவோ
ஏற்கவில்லை மனம் வாடுகின்றேன்
ஒரு குடும்பம் ஆகி வாழ்ந்ததுவும்
கணேசண்ணை சுவை சொல் கேட்டு மகிழ்ந்ததுவும்
என் வரவு பார்த்து காத்திருந்த காலமதும்
வந்ததுமே ஒரு கோப்பையிலே உண்டதுவும்
எண்ணியெண்ணித் துடிக்கின்றேன் அக்கா!

சீர் கொண்ட கணேசண்ணை உங்கள் கணவர் ஆனதுவும்
நற் பிள்ளைகள் பெற்ற பெரும் பேறு பெற்றதுவும்
உங்கள் பேறு என்று நாம் மகிழ்ந்திட்ட போதினிலே
இக்கொடுமை உங்களுக்கு ஆனது ஏனக்கா?

அழுதாலும் புரண்டாலும் காலன் கனிவதில்லை
காலத்தில் நீங்கள் செய்த அருஞ் செயலாலே
உங்கள் மறு வாழ்வு நல்லுலகம் இது உறுதி

வையத்தில் எம்மோடு வாழ்ந்திட்ட வாழ்வு விட்டகலாஇருந்தாலும்
மாமனிதர் என் அக்கா இல்லறத்தில் நீங்கள் வல்லவளே உங்கள் ஆத்மா
உயர்ந்திடவே எந்நாளும் போற்றுகின்றேன்.

உங்கள் தங்கை **-சகீலாபாணு -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

இரு மரபும் தூய சைவத்தமிழ்க் குடும்பத்தில் பிறந்த அமரர் திருமதி.கணேசலிங்கம் கலாதேவி அவர்கள் இம்மண்ணில் வாழ்ந்த காலத்தில் ஒரு அற்புதமான பெண்மணியாக வாழ்ந்து காட்டினார். இவரது இல்லற வாழ்வு மண்ணுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக் கிறது.

இவரைச் சூழவுள்ள உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் ஏதாவது துன்பங்கள் வந்துவிட்டால் அதைகண்டு மனமுருகி அந்த இடத்திற்குச் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி தேற்றும் அந்தப் பாரிய பணியைப் போர்க்காலம் தொட்டு இறைவனடி சேரும் வரை ஆற்றி வந்தார். வந்தாரை உபசரிக்கும் தமிழர் பாரம்பரிய பண்பு இவரிடம் நிறைந்திருந்தது. அவர்களின் நல்ல குணாதிசயத்திற்கு எடுத்துக்காட்டாக அவர்களின் பிள்ளைகள் நற்குணமுடைய வர்களாகவும் திறமையானவர்களாகவும் திகழ்கின்றனர்.அன்னாரின் அமரத்துவம் அடைந்தமை எமக்கு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தருகின்றது. அன்னாரது குடும்பத்தாருக்கு இது ஓர் எதிர்பாராத பேரிழப்பாகும். இந்த இழப்பைத் தாங்கும் சக்தியை இறைவன் அவர்களுக்கு அருள வேண்டும்

நமது ஆன்மா பூரண ஒளி வடிவானது ஆன்மா ஒருபோதும் இறப்பதில்லை. நமது காலவுடல் மட்டுமே இறக்கிறது. நாம் கடவுளை நோக்கி வளர்கின்றோம். அனுபவமே நமது பாதை.அனுபவத்தின் மூலமே நாம் கோபத்திலிருந்து அன்புக்கும் பயத்திலிருந்து பயமின் மைக்கும், சச்சரவிலிருந்து அமைதிக்கும், இருளில் இருந்து ஒளிக்கும் பரிபக்குவம் அடைந்து கடவுளோடு இணைகின்றோம். அமரர் திருமதி கணேசலிங்கம் கலாதேவி அவர்களின் ஆன்மா சாந்தியடைய நம்மைப் படைத்துக் காத்து இறுதியில் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் இறைவனை வேண்டுகிறேன்.

**- சு.பசுபதிப்பிள்ளை -**

**ஓய்வு பெற்ற கிராம அலுவலர்**

**திருநகர் வடக்கு- கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோர்ந்து போகாத முன்னுதாரணம்

வாழ்க்கை என்பது பல அனுபவங்களின் கள பரிசோதனைக் களம். இதில் மகிழ்ச்சியையே அறுவடை செய்து வருவது என்பது இயலாது. எனினும் மகிழ்வான சூழலை தக்க வைத்திருக்க வேண்டு மென பாடுபடும் ஒரு சிலரால் அக் குடும்பமும் கிராமமும் கூட மகிழ்ச்சியாக இருக்கும் என்பதனை நான் கலாஅக்காவின் வாழ்க்கை மூலம் கண்டிருக்கின்றேன். துயரத்தை துளியும் தாங்க திராணியற்று தவிக்கும் தனது கணவரை ஆற்றுப் படுத்தி எல்லா நிலமைகளையும் தானே பொறுப்பேற்று குடும்பத்தின் ஒரு ஆளுமை மிக்க பாத்திரத்தை கொண்டிருந்ததால் தான் இன்று அவரது குடும்பம் தலை நிமிர்ந்து நிற்க காரணமாகிறது. துன்பத்துக்காக சோர்ந்து போதல் என்பது அவரிடம் அறவே கிடையாது இது போன்றவர்கள் எமது சமூகத் துக்கான முன்னுதாரணங்களாகும். இப்படிப்பட்ட ஆற்றுப் படுத்து பவர்கள் மூலம் தான் சமூகம் தானாக இயங்கிக் கொண்டிருக் கின்றது. மரணம் அவரை மிக இளவயதில் பறித்து விட்டாலும் அவர் என்றும் எதிர்பார்க்கும் துன்பத்துக்கு துவண்டு போகாத தன்மையை அவரின் பிள்ளைகளும் தொடர்வார்கள். இதுவே அவருக்கான நன்றியாகவும் இருக்கும் என கூறி அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.அவரது இழப்பால் துயரும் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- அமரசிங்கம் கேதீஸ்வரன் -**
**உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,**
**மாவட்டச்செயலகம் - கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி கணேசலிங்கம் கலாதேவி அவர்களின் நினைவு பகிர்தல்

எனது ஆருயிர் நண்பனும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், காந்தீயம் ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினரும், விவசாயத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியுமாகிய திரு.கணேசலிங்கம் அவர் களின் துணைவியார் திருமதி கலாதேவி எனும் சகோதரி கலா அவர் களுக்கு நினைவுச் செய்தி எழுதும் நிலையினை எண்ணி என் உள்ளம் குமுறுகின்றது.

நானும் நண்பன் கணேசலிங்கம் அவர்களும் சுமார் 30 ஆண்டு களுக்கு மேலாக உற்ற நண்பர்களாக இருக்கின்றமைக்கு சகோதரி கலா அவர்களின் பங்கும் முக்கியமானது என்றே எண்ணுகின்றேன். எப்போது அவர்கள் இல்லம் நோக்கிச் செல்லும் போதெல்லாம் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது மட்டுமல்லாது அண்ணை, அண்ணை என்று உரிமையுடன் பழகி எனக்கு ஒரு இளைய சகோதரி இல்லையென்ற குறையை நீக்கிப் பழகிய அந்த நாட்கள் என் உயிர் உள்ளவரை மறக்க முடியாததாகும்.

ஒரு குடும்பப் பெண் எப்படி வாழ வேண்டும் எப்படித்தான் சார்ந்த சமூகத்தை அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதற்கு முதலிடத்தில் வைத்துப் பார்ப்பதற்கு சகோதரி கலாவைத் தவிர எனக்கு யாரையும் சொல்லத் தெரியவில்லை.

மனித வாழ்வில் மரணம் தவிர்க்க முடியாததென்பது யதார்த்தமாக இருந்தாலும் கூட இழப்பு என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. நண்பன் கணேசலிங்கம் பிள்ளைகள், உறவினர் எம்மைப் போனற நண்பர்களுக்கும் சகோதரிகலா அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆண் மகனின் வெற்றிக்குப் பெண்ணாணவள் எப்படி உறு துணையாக இருக்கின்றாளோ அதே போன்று ஒரு குடும்பத்தின் உயர்ச்சிக்கு, கௌரவத்திற்கு ஆணி வேராக பெண் இருக்கின்றாள். அந்த வகையில் கலா அவர்கள் மனைவியாக, தாயாக, உறவினராக, சகோதரி யாக, நண்பியாக வாழ்ந்த வாழ்க்கையினை மெய்ப்பட வைக்க நாமனை வரும் ஒன்று பட்டு அவரின் சிந்தனைக்கும், இலட்சியத்திற்கும் உயிர் கொடுப்போமாக இருந்தால் அதுவே நாம் அவர்களுக்கு செய்யும் உண்மையென அஞ்சலியாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் என் நண்பன் கணேசலிங்கம் மற்றும் பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் சகோதரியின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**- றி.ரி.லிங்கநாதன் MJF,JP -**
(Dip- in-Agri)
(முன்னாள் நகரபிதா - வவுனியா)
**வடமாகாணசபை உறுப்பினர்**
**வவுனியா மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தில் புன்னகையோடு அமரர் கலாதேவி

நம்முன்னோர்கள் வாக்குப்படி ஒரு இல்லத்தின் அரும்பெரும் செல்வம் இல்லத்தரசியெனவும் இல்லாள் எனவும் நம் பண்பாடு போற்றும் பெண். அத்தகைய பெண்ணாக எமது இனிய உறவு சமூக நோக்காளன் கவிஞன் கணேசலிங்கத்தின் அன்பு மனைவி கலாதேவி அவர்கள். காதலில் கலந்து இல்லறத்தில் இணைந்த இரட்டைப் பறவைகளில் ஒன்றின் பிரிவும் மற்றையதின் தவிப்பும் சொல்லில் எழுத முடியாதது. தன் புன்னகையாலேயே உறவுகளைத் தேடி இணைத்து, இணைந்து ஒரு இனிய இல்லறத்தைக் காட்டி நின்ற கலாதேவி பெற்றோருக்குப் புகழும் நன்மதிப்பும் மிக்க பிள்ளைகளை ஈன்றெடுத்திருப்பதும் அவர் பெயர் நெடுங்காலம் பரம்பரைகளால் நினைக்கப்படுவதாகிறது. கலாரசனையுள்ள மகிழ்ச்சிகரமான இக்குடும்பத்தில் போர் தந்த வடுக்களால் நிகழ்ந்து போன இழப்புக்கள் கண்ணீரை கலாதேவிக்கும் கணேசலிங்கத்துக்கும் காலக்கோலமாய் தந்து போனது துரதிஸ்டம். சமூகம் நன்கறிந்த இந்தக் குடும்பத்துக்கு கலாதேவியின் மரணம் நீங்காத துயரைத் தந்த போதும் ஒரு நல்ல மனைவியாய், நல்ல தாயாய், நல்ல இல்லத்தரசியாய் மற்றோர் நேசிக்கும் பண்புள்ள அயலாளாய் அவர் வாழ்ந்து போனார் என்பதை மனதில் கொண்டு நாம் ஆறுதலடைவோம். கோடி ஆண்டுகள் அழுது புலம்பினாலும் மாண்டு போனவர் மீண்டு வருவதில்லை என்பது தான் இந்த வாழ்வின் நியதி. நம் வாழ்வில் மரணத்தில் எம்மை முந்திக் கொண்டோராய் பலர் நாம் இருக்கப் பிரிந்து விடுகிறார்கள். ஆகையினால் மரணமும் பிரிவும் இருப்போருக்கு ஒரு பாடமும் பக்குவப்படலுக்கான வழியுமாய்க் கொண்டு வாழ முயற்சிப்பதே அறிவு. அமரர் கலாதேவி காலத்தில் அழகிய புன்னகையோடு வாழ்கின்றார். அவரின் பிரிவால் துயருறும் அன்புக்கணவன் கணேசலிங்கம் பிள்ளைகள் உற்றார்கள் ஆறுதல் பெற வேண்டும் அதற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**- சி.சிறீதரன் -**

**பாராளுமன்ற உறுப்பினர், - யாழ் . மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

நெடுந்தீவு கிராமத்தில் பிறந்து பின்னர் திரு.கணேசலிங்கத்தைக் கைப்பிடித்து உருத்திரபுரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த திருமதி கலாதேவி கணேசலிங்கம் அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தேன். அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க இல் வாழ்க்கை என்பது பண்புள்ளதாகவும், பயனுள்ளதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவையாகும். இதற்கிணங்க நல் மனைவியாக, பிள்ளைகளுக்கு சிறந்த தாயாக வாழ்ந்து கொண்டிருந்த வேளையிலே அவருக்கு ஏற்பட்ட நோயின் காரணத்தால் செய்ய வேண்டிய கடமைகள் எத்தனையோ இருக்க காலனவன் பிடியில் சிக்கி இவ்வுலக வாழ்வை நீத்து எல்லோர் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அமரர் கலாதேவி அவர்களின் பிரிவுத்துயரில் தாங்கொணாத துன்பத்திற்குள்ளாகியிருக்கின்ற கணவர் கணேசலிங்கம் அவர்களினதும், பிள்ளைகளினதும் துன்பத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன் மக்கட்பேறு”

குடும்பத்தின் பண்பாடு என்பது தான் இல்வாழ்க்கையின் சிறப்பாகும். அதற்கு மேலும் சிறப்புத்தருவது சிறந்த பிள்ளைகளைப் பெற்றிருப்பதாகும். இந்த வகையிலே தனது கணவனுக்கு சிறந்த மனைவியாகவும், தனது பிள்ளைகளுக்கு சிறந்த தாயாகவும் இருந்து தனது பிள்ளைகளை சிறந்த வகையில் பராமரித்து இன்று கல்விப்புலத்தில் ஆணித்தரமாக கால்பதிப்பதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். குடும்ப விளக்காகத் திகழ்ந்து தனக்கு ஏற்பட்ட நோயின் காரணத்தால் இன்று இயற்கையெய்தி அமரத்துவம் அடைந்த அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

-த.குருகுலராசா -

அமைச்சர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை,
இளைஞர்விவகார அமைச்சு, வடக்கு மாகாணசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி கணேசலிங்கம் கலாதேவி

அவர்களின் மரண செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைந்தேன். வந்தாரை வரவேற்று இன்முகம் காட்டி தோழமையுடன் பழகும் திரு.கணேசலிங்கத்திற்கு ஏற்ற துணைவியாக குழந்தைகளுக்கு பாசம் மிகுந்த தாயாக சுற்றத்தார்க்கு ஏற்ற உறவாக வாழ்ந்து இளமையிலே வாழ்வை முடித்துக் கொண்ட அன்னாரது மறைவு கல்மனதையும் கரைய வைக்கும் நிகழ்வாகும். குடும்ப பணியில் உறுதுணையாகவிருந்து பிள்ளைகளின் கல்வி உயர்விற்கு வலுச் சேர்த்தவர். உறவுகளின் இருப்புக்கு வழி சமைத்தவர்.

அறுவடைக்கு முன்னதான அவரது இழப்பு குடும்பத்தினருக்கு மிகப்பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அம்மாவின் ஆசைகளை நிறைவேற்றும் தைரியத்தையும் மனோபாவத்தையும் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்என இறைவனை இறைஞ்சுகின்றேன்.

நோயுற்ற காலத்தில் சோர்விலாது சேவையாற்றி தனது அன்பு மனைவியை இழந்து தவிக்கும் திரு.கணேசலிங்கம் அவரது குழந்தைகள், கந்தையா அண்ணன் குடும்பம், உறவுகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

**- இ.இந்திரராசா -**

**வடமாகாணசபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் மறக்க முடியாத கலாதேவி

கணேசலிங்கம் குடும்பத்தினர், உருத்திரபுரம் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் வகையில் பண்பாகவும், சிறப்புடனும் வாழ்ந்து வருகின்ற குடும்பமாகும். இந்தக் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் தனது குடும்பத்தை பத்தோடு பதினொன்றாக அன்றி உதாரணக் குடும்பங்களில் ஒன்றாக வளர்த்தெடுப்பதில் அமரர். திருமதி கலாதேவி கணேசலிங்கம் அவர்கள் செயற்பட்டுள்ளார்.

தனது கணவரான கணேசலிங்கத்தின் காந்திய செயற்பாட்டிற்கும், பொதுப் பணிகளுக்கும் கலாதேவி அவர்கள் பெரும் துணையாக இருந்துள்ளார். இதன் மூலம் இந்த சமூகத்தின் மேம்பாட்டிற்கு அவரும் தனது பங்களிப்பினை வழங்கியிருக்கின்றார்.

அந்த வகையில், அமரர்.திருமதி. கலாதேவி கணேசலிங்கம் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி, இந்த சமூகத்திற்குமான இழப்பாகும். சிறந்த பண்புகளைக் கொண்ட ஒருவர் கலாதேவி. இவர் தனது உறவினர்கள், நண்பர்கள் என்ற வட்டத்திற்கு அப்பால் தனது கணவரோடு இருந்து பல பொறுப்புகளிலும் ஈடுபட்டுள்ளமை அவரின் தனித்துவமான சிறப்பாகும். அந்த வகையில் கணேசலிங்கத்தின் செயற்பாட்டிற்கும், அவரின் வாழ்விற்கும் கலாதேவி அவர்கள் உந்து சக்தியாக இருந்துள்ளார்.

அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்போம்.

**- வைத்தியநாதன் தவநாதன் -**

வடக்கு மாகாண சபை உறுப்பினர்,

வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதருள் மாணிக்கம்

உருத்திரபுரத்திலோர் உத்தம குடும்பம் பெருத்த புகழ் பிள்ளைகளுடை பேர் மிகு குடும்பம் சரித்திரம் எழுதினால் தாள்கள், நாள்கள் போதாது. வருந்தியுழைத்த வாஞ்சைமிகு வயற்காரன் கந்தையாக் கமக்காரன். அவர் மனையாள் பொன்னம்மா அருஞ் சிறப்புக் குடும்பத்தில் அரியவன் என் நண்பன் கருத்துடை செய்வோன் கணேசலிங்கமவன் விருப்புடையான வேகருந் சிந்தனையாளன். சிறுமையறியாமற் பேருயர் பதவி வகிப்பவன். ஒரு சில வருடங்கள் எம்மோடு கிராமசேவகராய் பெருமையுடன் கடமை புரிந்த போது பெற்ற இவன் சாம்பசிவத்தாரும் சார்ந்த இராசேஸ்வரியும் தாம் பெற்ற ஏகபுத்திரியாம் இனிய கலாதேவியை பெற்றோர் சம்மதம் பெற்று கடிமணம் பூண்டிருந்தான். கருவறையிலேயே கணேசனுக்கென்று எழுதப் பட்டாள். அரும் பொக்கிசம் ஆற்றலோடு அழகுநிறை பத்தினி நடந்தும் மிதித்த புல் சாகாது நிமிர்ந்து நிற்கும் மடந்தையவள். மெதுவாகப் பேசுவாள் மேற்குலத்தாள். பிள்ளைச் செல்வங்களைப் பெருமையோடு வளர்த்தெடுத்து கள்ளம் கபடமின்றிச் கற்றறிவு தானுட்டி மெள்ள வே தம் வாழ்வை மேலாக ஓட்டினரே. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பாள். பொறுமையின் பூ மகள் பேரழகிற் திருமகள் மறுமொழி யில் மந்திரியாய் நின்றுரைப்பாள். கலகலப்பாய் வாழ்ந்த கலாதேவிக்கு என்ன நடந்தது. சொல்ல முடியவில்லை. சோதனையில் என்னவென்று. வாழ்வின் பட்டாம் பூச்சியாய்சிறகடித்துப் பறந்தவள் மாழ்வாகிப் போனதை மறக்கவே முடியவில்லை. தோள்வலு குறைந்து நிற்கும் கணேசன் மாறவேண்டும். நாள் பல போகாது நல்லாறுதல் கூறுதற்கு ஏது செய்வோம் நாம் இருக்கும் வரை ஏற்றிப் போற்றி மாதருள் மாணிக்கமாய் மதித்து வாழ்ந்திடுவேன்.

*ஓம் சாந்தி!*

**- க.மகேந்திரன் -**

**கந்தர்மடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவலயத் "திரு" போல் வாழ்ந்தார்

கண்ணிய நண்பன் கவி கணேஸ் இதயத்தில்
வண்ணமுடன் பூத்த மாமலரை – எண்ணமுடன்
இறையு மழைத்து வீடேற்றம் தான்நல்கி
நிறைவுடனே காக்கும் நிலைத்து

வேறு

அன்னையின் தயையைப் பெற்று
அன்பதே உருவாய் உற்று
இன்னல்கள் எதுவந் தாலும்
இடுக்கணுக் கிடுக்கன் நல்கி
துன்பத்தை வெளிக்காட் டாது
சோர்விலா வாழு முள்ளம்
என்னதா னிவரின் பண்பு
இயம்பிட வார்த்தை யேது

குழந்தையி னுள்ள மென்றும்
குன்றிடா தொலித்து நிற்கும்
களங்கமோ கபட மேதும்
கடுகள வில்லா நாற்று
வளங்களே கொழிக்கும் வார்த்தை
வற்றாத அன்பின் ஊற்று
குளவெழிற் கஞ்சம் மேவும்
குவலயத் "திரு" போல் வாழ்ந்தார்

குழந்தைபோற் கபட மில்லா
குறுநகைச் சிறப்பைக் காட்டி
களமிகு "தரு" வாய் நின்று
வருவோரை வணங்கி யேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமுடன் விருந்து ஓம்பும்
உணர்வதே யுரிய பண்பு
பழம்பெரும் மரபு காக்கும்
பாத்திர மாக வாழ்ந்தார்

தன்னையும் காத்துத் தன்னைத்
தற்கொண்டான் தனையும் காத்து
குன்றிடாப் பாசங் கொண்டு
குழந்தைகள் தமையும் காத்து
நன்றென உறவு சுற்றம்
நலம்பெற நினைத்துக் காத்து
இன்முகங் காட்டி யெல்லார்
இதையமும் நிறைந்தே சென்றார்

அத்துணை யிவரின் பண்பும்
அனைவரு மறிவா ரிந்த
முத்தனை யாளின் மேன்மை
முழுவது மறிந்த தாலே
அத்தனாம் இறையும் அங்கு
அழைத்திட வேண்டு மென்று
சித்தமே கொண்டு தானோ
சிவனடி தன்னில் சேர்த்தார்.

**கலாபூஷணம், சந்தக்கவிஞர்**
**- நவ.பாலகோபால் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரு மழைத்துளி விறகில் விழும்

கடவுளே எமை கண் திறந்து பாரும்
அமைதியினை தேடுகிறோம் விடை இங்கு தாரும்
கோயிலில் இருப்பது நீர் என்று சொன்னால்
எம் கோலத்தின் விளைவை நீரே காணும்

உயிர்களைக் காப்பதில் நாமே ஏழை – இனி
மேலும் இழக்க எம்மிடம் எதுவுமே இல்லை
வாழக் கொடுத்த வாழ்வியலாளன் – எம்
பாதை முழுக்க முட்களை தந்தது
முடியும் வரை நடந்து பழகவா – இல்லை
முடியாமல் நாம் சோர்ந்து தீரவா

முகங்கள் பல கொண்டு இருக்கும் காலத்தில்
ஒரே முகம் கொண்டு உலகை சாய்த்தவன்
அன்பால் அனைவரையும் நூலில் கோர்த்தவன்
சிறந்த ஆயுதம் சிரிப்பே என்றும் சத்தியம்
சொன்னாள் – நம் அக்கா
உறைந்த செய்தி காதில் எட்டவே
கைகால் தளர்ந்து குருதி உறைந்தது

முடிவு காணா நோய் உம் முடிவைத் தந்தது
எம் உறுதியை உடைக்கும் இடியாய் வந்தது
கொள்கை இதை கொள்வதால் கூறினும்
நிஜத்தில் நான் நாத்திகன் ஆகிறேன்

உம் பெருமை கூற பேனாவால் முடியுமா? ஆம் எனில்
அதன் வறுமை கூற வானம் வேண்டுமே
தாயே தேற்றுவார் தேடி நான் தெருவில்
இறங்கினேன் – பாவம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவே என்னைக் தேற்றக் கேட்டது – நானோ
பூச்சினம் தேடிப் புறப்பட்டவனானேன்

கடந்து போகும் காற்றை கேட்கிறேன்
அதுவோ அழுகுரல் பல இழப்புகளைத் தந்ததால்
பெரும் பாரமாய் மோதிப் போனது
என் உயிர் மட்டுமல்ல ஊனையும் உருக்கிப் போனது

இதயம் வலிக்கிறது அம்மையே – வலி
என் வீடு தொடங்கி உம் வீதி வரை நீண்டது
என் பாதை நிஜத்தில் நான் எப்படிக் காட்ட
என் இறுதிவரை கூறுவேன்
நிரந்தரம் எதுவுமே நிரந்தரமற்றது – ஆனால்
உம் நினைவு என்னில் நிரந்தரமானது

முடி நரைத்த வயதிலும் கணேஸ் அண்ணன்
பிடி தளர்ந்து கண்டதில்லை – மன்னித்து விடு
உடைந்த மனிதனை ஒன்றாக்கும் தெளிவு
என்னிடம் இல்லை

கண்காணா தேசத்தில் இருந்து நகலை
காட்டினாலும் – உமை
காணா தேசத்தில் எமக்கு ஒளியே வேண்டாம் – ஆம்
இந்த விட்டிலின் விளக்கு அணைந்து போயிற்று
சீதையை மீண்டும் சிதையில் கண்டதால் – என்
பாதைகள் எல்லாம் சாயம் போன சருகுப் பூக்கள்
கோடையில் நீரும் கள்ளன் தான் – ஆம்
இருந்தபோதும் அள்ளித் தந்தீர் – உம்
இனிமையை நினைக்கும் போதெல்லாம் – எம்
கண்களில் கண்ணீர் தருகின்றீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இறுதிவரை கூறுவேன் நிரந்தரம்
எதுவுமே நிரந்தரமற்றது
உம் நினைவுகள் எல்லாம் நிரந்தரமானது
காற்றானது எமைத் தொட்டுப்போம் – முடிந்தால்
நீர் தான் என்பதைக் காதில் சொல்லும் – எம்
கடைசிவரை நாம் உம் குரல் கேட்க வேண்டும்

**- பத்தன் -**

**வி.சோ.திணைக்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவனருகே ஆனந்தமாய் பள்ளி கொள்வீர்..

உதயமாகும் பூக்கள் எல்லாம் உதிர்ந்துபோகும் காலம் உண்டு
இருந்தபோதும் காலன் அவன் இடையில் வந்து பறித்ததேனோ?
காலன் அவன் கைப்பிடிக்கு காலம் தான் வந்ததுவா? அன்றி
கண்ணீரில் தவிக்கவிட்டு கண்ணெதிரே சென்ற கவினாவின் அழைப்பிதுவா?

காடு முள்ளு கடந்து முள்ளி வாய்க்கால் தாண்டி பட்ட துன்பம்
பல கடந்து சதிவலையில் சிக்காது சாதுர்யமாய் வந்தும்
இன்று விதி வலையில் சிக்கிக் கொண்ட மாயம் தான் என்ன?

பண்ணைத்தலைவி எங்கே? பூஜித்து பூஜை செய்த என் பூமகள் எங்கே?
சதுர்த்தி பொங்கல் இட்ட என் பொன்மகள் எங்கே? வடை மாலை,
குழை சோறு, வெண்பொங்கல் இட்ட என் வடிவழகி எங்கே? என
பண்ணைப்பிள்ளையாரும், அம்மனும் புலம்புகிறாள் இன்று

அன்னை வடிவில் அன்றி உங்களை நான் கண்டேன் – பண்ணையில்
பழகிய காலங்களில் எத்தனை நாள் உம் கையால் உணவுண்டேன்
ஜதாவின் திருமணம் பற்றி எத்தனை எத்தனை கனவுகள் – அத்தனையும்
என்னிடம் பகிர்ந்து விட்டு இத்தனை மாயமாய் சென்றதேனோ?

கணவன் மனைவி பாசம் அதைக்கண்டு கொண்டேன் உம் வாழ்வில்
இத்தனை வயதிலும் இத்தனை பாசமா என எத்தனை நாள் வியந்ததுண்டு
பித்தவெடிப்பென்றால் Sir இன் கால்தூக்கி மடி வைத்து – வெந்நீரில்
கழுவிக் கொள்ளும் பக்குவம் தான் என்ன?

எத்தனை கோபம் எப்படி வந்தாலும் ஒரு கணமும் உம் முகத்தில்
கோபத்தை கண்டதில்லை – எத்தனை அழகு எத்தனை புன்னகை?
அத்தனையும் எண்ணுகையில் கலங்குது கண்கள்
நல்லவர்கள் பூமியில் பல காலம் வாழ்வதில்லை
நல்லபடி அவனருகே ஆனந்தமாய் பள்ளி கொள்வீர்......

அன்புள்ள தங்கை
**-திருமதி லக்கி நிரஞ்சன்குமார் -**
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் தத்வம் ஆஷி

என்னப்பா கணேசா!

உனக்கும், உன் குழந்தைகளுக்காகவும் நண்பன் நவத்தானின் ஆறுதல் வார்த்தைகள் சில,

கணேசா!

உன் இல்வாழ்வின் ஆரம்பம் அறிந்தவன் நான். காதலாகி, கலாவைக் கைப்பிடித்து களிப்புற்று இல்வாழ்வில் இன்புற்றிருக்கும் வேளையில் இன்று நீ கண்ணீர் சொரிந்து கலங்கி நிற்கின்றாய்.
கலங்காதே நண்பனே!
காலம் பிரச்சினைகளைத் தீர்க்கும்
இதுவும் கடந்து செல்லும் தத்துவம் அறிந்த வித்தகன் நீ. ஒரு புன்சிரிப்பிற்குள் உன் கவலைகளையெல்லாம் கரைத்துவிடு. சோகம் கலைந்து சோர்வற்ற உன் முகம் தான் உனது பிள்ளைச் செல்வங்களின் வேதனைகளை விரட்டும். அவர்களின் உள்ளத்தை உரமூட்டும். இவ் வேளையில் தான் உன் பேராண்மை வெளிப்பட வேண்டும். உலக நாடகத்தில் இதுவும் ஒரு காட்சி. உள்ளத்து உணர்வுகளையெல்லாம் ஓரம் கட்டி விட்டு உள்ளே போடா! உண்மையொன்று உனக்கும் விளங்கும். அதையும் கடந்து செல்லடா! அங்கேயும் ஒன்றுமில்லையென்பது உனக்குப் புரியும். அப்போது உன் உள்ளத்திலிருந்து வெளிப்படும். புன்சிரிப்பொன்று உன்னையறியாமலே உன் உதட்டில் தவழும். இப்போது நீ நித்தியானந்தன். பிறகு ஏனடா கலங்குகிறாய்?
கலங்காதே கணேசா!
பிள்ளைச் செல்வங்களே!

இவ்வுலகம் தோன்றிய காலத்திலிருந்து எத்தனை கோடி அம்மாக்கள் காணாமல் போய்விட்டார்கள். இன்னும் போகக் காத்திருக் கிறார்கள். உங்கள் அம்மா விதி விலக்கல்ல. இது உலக நியதி. ஒரு முறை முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை நினைவுகூர்ந்து பாருங்கள். எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாக்கள் செத்து சீரழிந்து அநாதைப் பிணங்களாக அந்திம கால கிரிகைகள் கூடச் செய்ய முடியாமல் கடற்கரைப் புழுதியில் புழுக்களின் அரவணைப்பில் அழிந்து போனார்கள். இந்த வகையில் உங்கள் அம்மா கொடுத்து வைத்தவள். அம்மாவின் ஈமக்கிரிகைகளைச் சிறப்புடன் நடாத்தி வழியனுப்பி வைத்தீர்களே இது போதாதா உங்களுக்கு?

ஆத்மா அழிவதில்லை. அம்மாவின் ஆத்மாவும் அழியவில்லை. உங்களால் அவளைப் பார்க்க முடியாது. ஆனால் அம்மா எப்போதுமே உங்களை அவதானித்துப் பார்த்துக் கொண்டேயிருப்பாள். எனவே உங்கள் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாயின் நீங்கள் கண்கலங்கக் கூடாது. கல்வியைக் கருத்துடன் தொடருங்கள். அப்பாவின் அரவணைப்பில் உங்கள் கவலைகளையெல்லாம் கரைத்து விட்டு அடுத்த கட்டத்திற்கு அத்திவாரம் இடுங்கள். உங்கள் எதிர்கால வாழ்வின் மலர்ச்சி தான் அம்மாவின் ஆத்மாவை ஆறுதல்படுத்தும். துயரங்களையெல்லாம் தூர எறிந்து விட்டு தொடருங்கள் உங்கள் வாழ்வினை. நிமிர்ந்து நில்லுங்கள்! விழிப்புடன் செயற்படுங்கள்! எத்தனை துயரங்கள் வந்தாலும் அத்தனையையும் தூசிபோல் தட்டிக் காற்றில் பறக்க விடுங்கள். எல்லோரும் இறப்பது நிச்சயம். இதற்கிடையே என்ன விளையாட்டுக்கள், வேடிக்கைகள் வேதனைகளையெல்லாம் விரட்டி விட்டு வீறுநடை போடுங்கடா! செல்வங்களே! வேறன்ன நான் சொல்ல?

இவ்வுலகில் தோன்றி அனைத்துமே ஒன்றே தான்
அந்த ஒன்றிலும் ஒன்றுமில்லை.

அம்மாவின் ஆத்ம சாந்திக்காய் குடும்பசகிதம் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நண்பன், மாமா
**- நவத்தான் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்திருந்த உணர்வோடு
# வாழ்வது தான் விதியாமோ?

கலைத்தாயின் நேசமகன்
கணேசனெனும் கவிக் காவில்
காதலிலே பூத்தொளிர்ந்த
கோதை கலா நீ தான்
சீலத்தால் உயர்ந்த குணச்
செம்மைக்குள் வாழ்ந்திருந்தாய்
காலமகள் வந்துன்னைக்
கைப் பிடித்துப் போயினளே

பாசப் பனிமலரே
பழக இனியவளே
பண்புக்கோர் தனியிடமே
கண்ணுற்றோர் கட்டியழ
கண்களெல்லாம் நீர் சொரிய
விட்டு வெளிப்பட்டாய்
விண்ணுலகு விரும்பினையோ

சாவில்லாப் பெருவாழ்வுள்
சங்கமித்துவிட்டாய் நீ
சந்தனத்தின் நறுமணமே
சன்னதியின் பொற்திருவே
மண்ணிலுள்ள உறவெல்லாம்
மனம் வெதும்பிக் கதறியழ
குங்குமத்தின் கொலுவோடு
குடிபெயர்ந்து போயினையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நினைவுகளால்
நித்தமுனைத் தேடியமும்
ஆழ்ந்த உறவுகளும்
அன்புக் கணவனுடன்
ஆசைமணிப் பிள்ளைகளும்
வாழ்ந்திருந்த உணர்வோடு
வாழ்வது தான் விதியாமோ

**- முத்தையா சிவலிங்கம் -**

## மேலே செல்லுங்கள்

**சளைக்காத மனம்!**
**சளைக்காத மனத்தைப் போல**
**வேறு சக்தியில்லை திறமை மட்டும் போதாது.**
**திறமையிருந்தும் தோற்றுப் போனவர்கள் ஏராளம்**
**புத்திசாலித்தனம் மட்டும் போதாது**
**"பலன் காணாத மேதை" என்பது பழமொழி**
**படிப்பு மட்டும் போதாது படித்தும்**
**பாதை தவறியவர்களால்**
**இவ்வுலகம் நிரம்பியிருக்கிது.**
**சளைக்காத மனமும் உறுதியும் தான்**
**வெற்றியைத் தேடித்தரும் சாதனங்கள்**

**- கால்வின் கூலிட்ஜ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அக்கா எனக்கு வேண்டுமே ....

அக்கா இறந்திட்ட செய்தி
மேகமே அழிந்தது போல் இடியாய் இடித்தது
இனிய முகம் இனிமேலும் இல்லையென ஏங்குகிறேன்
இருந்தாலும் இச்செய்தி பொய்யாகிட
மனம் எண்ணி தவிக்கிறது!

மனம் ஏற்கவில்லை உங்கள் மரணத்தை
உங்கள் சிரிப்பு பாசமொழி யார் பகர்வார் – எனி
அக்காவின் உறவு முடிந்ததுவோ
ஏற்கவில்லை மனம் வாடுகின்றேன்
ஒரு குடும்பம் ஆகி வாழ்ந்ததுவும்
கணேசண்ணை சுவை சொல் கேட்டு மகிழ்ந்ததுவும்
என் வரவு பார்த்து காத்திருந்த காலமதும்
வந்ததுமே ஒரு கோப்பையிலே உண்டதுவும்
எண்ணியெண்ணித் துடிக்கின்றேன் அக்கா!

சீர் கொண்ட கணேசண்ணை உங்கள் கணவர் ஆனதுவும்
நற் பிள்ளைகள் பெற்ற பெரும் பேறு பெற்றதுவும்
உங்கள் பேறு என்று நாம் மகிழ்ந்திட்ட போதினிலே
இக்கொடுமை உங்களுக்கு ஆனது ஏனக்கா?

அழுதாலும் புரண்டாலும் காலன் கனிவதில்லை
காலத்தில் நீங்கள் செய்த அருஞ் செயலாலே
உங்கள் மறு வாழ்வு நல்லுலகம் இது உறுதி
வையத்தில் எம்மோடு வாழ்ந்திட்ட வாழ்வு விட்டகலாஇருந்தாலும்
மாமனிதர் என் அக்கா இல்லறத்தில் நீங்கள் வல்லவளே உங்கள் ஆத்மா
உயர்ந்திடவே எந்நாளும் போற்றுகின்றேன்.

**உங்கள் தங்கை –சகீலாபானு –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கலாதேவி கணேசலிங்கம் அவர்களுக்கான கண்ணீர் காணிக்கையாகச் சில வரிகள் ....

பூவிழியால் கண்சிமிட்டி
புன்னகையால் அள்ளியெடுத்து
வாரிச்சொரியும் வார்த்தைகளோடு
தாய்மையின் பொக்கிசமாய் தரணியில்
உதித்திட்ட தேவதையே!
வெஞ்சினமே உனைக் கண்டு
அஞ்சி ஓடிடுமே!
மெல்ல வருடும் தென்றலாய்
உதிர்த்திடும் நின் வார்த்தைகள்
வருடுதே பாசத்தின் உறவுகளை!
எக்கணமும் ஏதோ சிந்தனை
கொஞ்சநாட்களாய் நின் முகத்தில்
ஈழத்துயரில் தொலைத்திட்ட – நின்
சந்தோசத்தைத் தேடுகின்றாயோ? – என்று
காணும்போதெல்லாம் நின்
கண்ணோக்கி பதறினேயே!
ஆனால் ...........
நீங்களும் எமைவிட்டுப் பறிபோவீர்கள் – என்ற
வருடல் வந்ததில்லையே ஒரு கணமும்!
இறுதிக் கணத்தில் அந்த சில மணித்துளிகள்
உங்களருகில் ஆறுதலளிக்கக் கிடைத்த
பெரும் பொழுதுக்காய் ஆண்டவனுக்கு
கோடி நமஸ்காரம் கூறினேன் அக்கா!
பாசத்தின் தேவதையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்துணையாய் அனைவரையும்
அள்ளியெடுத்து அமுதளித்தீரே!
கள்ளமில்லா நின் காதலால்
கட்டுண்ட கணேஷ் அண்ணாவும்
நின்கரம் பறிபோனதால்
பதறுகின்ற சோகம் தனைப்
பார்த்திட முடியவில்லையே!

பார்த்திருந்த நின் மழலைகளோ
பரிதவித்துப் பதறும் நிலையை
தேற்றிட முடியாமல் தோற்றிட்ட
செய்திளைத் தானும் அறிந்தீரோ?

பற்றுறுதி மிக்க பதிவிரதையாய்
பார்போற்றும் உத்தமியாய் – எம்
கண்களின் குளிர் நிலவாய்
உலா வந்தவளே!
என்னே அவசரம் எமையெல்லாம்
தவிக்கவிட்டு இறைவனடி யே!
பூமாலையாலும் பாமாலையாலும்
வணங்குகின்றோம் வந்திடம்மா – மீண்டும்
ஒரு முறை எல்லோரும் ஒன்றாக வாழ்ந்திடவே!

பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன்

**– திருமதி மீனலோஜினி சிவதாஸ் –**

அதிபர், கிளி/உருத்திரபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

வையத்துள் வாழ்வாங்கு வாழுதல் என்பது இலகுவான விடய மல்ல. எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்தலும் வாழ்ந்து பிறருக்கு உதாரணமாக விளங்கு தலும் இவ்வுலகில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. மேற்கூறிய நெறியிலே எம்மிடையேவாழ்ந்து தீராத நோயின் வயப்பட்டு இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட அமரர் கலாதேவி கணேசலிங்கம் அவர்கள் எம்மிடையே வாழ்வோருக்கு ஒரு உதாரமாக விளங்கினார்.

இலங்கைத்தீவின் வடக்கே நீண்ட தீவாய் அமைந்தமையினால் நெடுந்தீவு என்று அழைக்கப்படும் புகழ் பெற்ற தூய தமிழ் சொற்கள் இன்னும் அழியாது நிலைத்திருக்கும் அக்கிராமத்திலே தனிநாயக முதலி என்றழைக்கப்பட்ட முதலியார் பரம்பரையில் சாம்பசிவம் + இராஜேஸ் வரி தம்பதிகளின் செல்வப்புத்திரியாக அவதரித்துத் தன் கல்வி சிறக்க உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றார். சிவந்த செந் தாமரை போல் எந்நேரமும் சிரித்த முகமும், சிறந்த மனப்பாங்கும், அறிவுத் திறனுடனும் வாழ்ந்து காட்டினார். தனது கணவரின் உயர் பதவி களை எட்டுவதற்கும் முழுமையான ஒத்தாசையாக இருந்தார். மாணிக் கப் பிள்ளையார், பொறிக்கடவை கண்ணகை அம்மன், போன்ற ஆலயங் களில் மிகவும் அன்பு கலந்த பற்று கொண்டவர். அது மட்டுமல் லாது தன் பிள்ளைகளையும் இறைபக்தி உள்ளவர்களாக வளர்த்தெடுத்தார் சமூக சேவைகளோடு தமிழ், சைவம் வளர தனையுருக்கி அணைந்துள்ள குலவிளக்கின் ஆத்ம ஈடேற்றத்துக்கு வேண்டுதல் செய்வோம்.

**“மரணம் என்பது ஜனனத்தின் போதே**
**நிச்சயிக்கப்பட்டதொன்று”**

**- ஐ.இராஜரட்ணம் -**

**கிளி/சிவநகர் அ.த.க.பா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைதாங்கி

அடிசிற்கினியாயே அன்புடைய மாதே
படி சொற்தவறாத பாவாய் – அடிவருஷடிப்
பின் தூங்கி முன்னெழும் பேதையே
மென்தூங்கும் என் கண்ணீர்

இது திருவள்ளுவரின் துணைவியார் வாசுகி அம்மையார் இறந்த போது திருவள்ளுவர் பாடியதாகக் கூறப்படும் ஒரு தனிப்பாடல். இதை வைத்துப் பெண்ணியம்பற்றிப் பேசுவோர் பலவாறாகச் சொற்சிலம்பம் ஆடுவர். ஆயினும் 2000 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவனுக்கு வாய்த்த மனைவி போல் தம்பி கணேசுவுக்கும் கலாவதி வாய்த்தார். பண்டைத் தமிழன் பண்பாடாம் களவு பின் கற்பு என்னும் இல்லறத்தில் இணைந்து கொண்டனர் இருவரும்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்பது ஒரு பாடல் அடி. ஆம் அவளே தான் குடும்பத்திற்கு தாயாய், தந்தையாய், உடன் பிறப்பாய், செல்வக்குழந்தையாய், பக்க பலமான உறவாய், இருந்து செயற்படுபவள் இது தம்பி கணேசிற்கு கலாவால் அமைந்தது. தங்கை கலாவதி அவர்கள் அன்பு, அடக்கம், பொறுமை, பணிவு, மறந்து மன்னிக்கும் உயர்ந்த உள்ளம் ஆகிய அனைத்துப் பண்புகளும் திரண்டு ஒருவராய் விளங்கினார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. சுருக்கமாய்ச் சொல்வதானால் அவர் ஒரு ஈகையின் திருவுருவம் சுமைதாங்கி. வந்த விருந்தினரை வரவேற்பது ஒரு பெருமைக்குரிய பண்பு. இப்பண்பில் சிறிதும் சளைக்காதவர்களாக இவ் விணையர்கள் என்றும் முன்னின்றனர்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக்குழையும் விருந்து (கு.90) என்னும் வள்ளுவன் வாக்கிற்கு இடம் கொடாது இன்முகம் காட்டி அகமும் முகமும் மலர வரவேற்று அவர் தம் விருப்பிற்கு ஏற்றவாறு உணவாக்கி உண்ணுங்கள்! உண்ணுங்கள் எனக் கட்டாயப்படுத்தி வயிறாற உண்டு களிக்க வைப்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவதி கணேசு இணையர்கள். இதைத்தான் உலகப்புகழ் ஔவைப் பெருமாட்டியார் நாலுகோடி பாடலில் ஒரு பாடலாக

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்
பாடுவார் இதையே வள்ளுவனார்
பகுத்துண்டு பல்லுயில் ஒம்புல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை (கு 322) என்பார்

பண்டைத்தமிழன் பண்பாட்டின் வரைவிலக்கணம் அமரர் கலாவதி தான். இவர் தன் குடும்பத்தின், உறவின், சுமைதாங்கியாய் வாழ்ந்தார் எனலாம். இவர்களின் பண்பும், ஒழுக்கமும், பிள்ளைகளின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு, பண்பிற்கு, ஒழுக்கத்திற்கு வித்தாய் அமைகிறது. அந்த வகையிலும் பிள்ளைகளையும் நல்ல பண்பாளர் களாய், ஒழுக்கசீலர்களாய், கல்வியில் உயர்ந்தவர்களாய் ஆக்கியுள்ளது. இருந்தும் இவர்களின் முழு வளர்ச்சியைக் கண்டு இன்புற முடியாது அவரைத் தடுத்துவிட்டது இயற்கை (ஊழ்)

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (கு380) என்பார் வள்ளுவர். பிறக்கும் போதே இறப்பென்பது நிச்சயப்படுத்தப் பட்டு விடுகிறது. இறப்பு தடுக்க முடியாதது தான். ஆனால் செயற்கை அழிப்புக்கள் கொடூரநோய்கள் போன்றவற்றாலும் இழப்புக்கள் ஏற்படும் போது தான் மனத்திற்கு தாங்கொணாத்ட துன்பத்தை அது தருகிறது.

இவர்கள் வாழ்க்கையென்னும் நீரோட்டத்தில் சந்தித்த இன்னல் கள், இடர்கள் விபரிக்க முடியாதவை. ஒட்டுமொத்தத் தமிழின மும் முகம் கொடுத்த சொத்திழப்புகள், இடப்பெயர்வுகள், சொல்லொணா மனவேதனைகளுக்கு இவர்களும் விதிவிலக்காய் இருக்கவில்லை. இவற்றிற்கெல்லாம் இமயமாய் இவர்களை மீளாத்துயரில் ஆழ்த்தியது இவர்களின் செல்வக்குழந்தைகளில் நால்வரில் ஒருவரான கடைசி மகளையும்................ யும் கணேசின் உடன் பிறப்பான சிவா (புவனேந்திரராசா) வையும் 2009இல் நடைபெற்ற போரின் போது பறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்ததாகும்.

தாயொடு அறுசுவை போம் தந்தையொடு கல்வி போம்
சேயொடு தான் பெற்ற செல்வம் போம் – ஆயவாழ்வு
உற்றார் உடன் போம் உடன்பிறப்பால் தோள்வலி போம்
பொற்றாலியொடு எவையும் போம் என்பார்

நீதிநூல் ஔவையார் தனது தனிப்பாடல் வழியாக ஒருவரைப் பத்துத் திங்கள் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயை இழந்தால் அந்தத் தாய் தந்த சுகங்களும், அறுசுவை உணவையும் இழக்கின்றான். தந்தையை இழக்கின்ற பொழுது உணவு, உடை அவனது கல்வியைத் தொடர முடியாத நிலையேற்படுகின்றது. ஒரு வீட்டின் குடும்பத்தின் செல்வம் அவ்வீட்டிலுள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியை, இன்பக் களிப்பைக் கொடுக்கின்றது. குழந்தை வீட்டின் நடமாடும் செல்வம் அதையிழந்தால் அவ்வீட்டின் செல்வம் அழிந்ததைப் போன்றதே. உற்றார் உறவினர் நமக்கு எப்போதும் உறுதுணையாய் இருப்பவர்கள் அவர்கள் தான் நம் நல்வாழ்வின் உறுதுணை. அவர்கள் போய் விட்டால் நம் வாழ்வே பாழ் தான். நம் உடன் பிறப்புகள் எமக்கு வலிமை சேர்ப்பவர்கள். எமது ஊக்கத்திற்கும், ஆக்கத்திற்கும் காரணமானவர்கள். அவர்களை இழக்கும் போது நாம் வலிமையற்று பிறர்க்கு அஞ்சியும் வாழ வேண்டியுள்ளது. ஆனால் ஒருவன் தன் வாழ்க்கைத் துணையை இழக்கும் போது மேற்குறித்த அத்தனையையும் இழக்கின்றான் என்பது தான் இப்பாடலின் பொருள்.

தம்பி கணேசும் பிள்ளைகளும் கடந்த சில ஆண்டுகளாக மேற்குறித்த எல்லாவகை இழப்புக்களுக்கும் முகம் கொடுத்து சொல்லிலடங்காத துயரில் மூழ்கிக் கிடக்கின்றனர். செல்வ மகளை இழந்து இன்று தனக்கு என்றும் ஆறுதல் தந்த துணையிழந்து தவிக்கின்ற உமக்கோ, பிள்ளைகளுக்கோ எம்மால் எப்படி ஆறுதலை, அமைதியைத் தர முடியும். இது எம்மையும் வாட்டுகிறது. இருந்தாலும் இது உலகத்து இயற்கை நாமும் இதற்கு விதி விலக்கானவர்கள் அல்ல. சற்று முந்தலாம் அல்லது சற்றுப் பிந்தலாம் அவ்வளவு தான். இதை ஔவைப் பாட்டியார் பின்வருமாறு கூறித் தேற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்
எமக்கென்ன என்று இட்டுண்டு இரும் (நல்வழி 10)

எனவே இது உலகத்து இயற்கை ஆகையால் அதை விடுத்து(மறந்து) அடுத்தவர்க் கொடுத்து (இட்டு= பகிர்ந்து) நீயும் உண்டு இரு என்கின்றனர். இதைக் குண்டலகேசிக் காப்பியத்தின் ஆசிரியர் கூறும் போது

பாலையாம் தன்மை , பாலனாம் தன்மை செத்தும்,
காளையாம் தன்மை செத்தும், காமுறு இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பும் இன்னே, மேல்வரு மூப்புமாகி நாளும் நாம் சாகின்றோமாகில் நமக்கு நாம் அழாததென்னே

எமது உடலிலே ஏற்படுகின்ற மேற்கூறப்பட்ட பருவமாற்றங்கள் ஒரு பருவம் இறந்து இன்னொரு பருவம் எம் வாழ்நாளிலேயே ஏற்படும் போது அவற்றிற்காக அழாத நாம் இன்னொருவர் இறக்கும் கோது இழுகின்றோமென்றால் அது பொய் அழுகை என்கின்றார். அதாவது இவையெல்லாம் வாழ்வில் ஏற்படும் இயற்கை வாழ்வியற் சுற்று என்றவாறாகத் தேற்றுகின்றார்.

அவர் இறக்கவில்லை, அவர் நீங்களாக உங்கள் உறவுகளாக உங்களைச் சுற்றிக் கொண்டிருக்கின்றார். உடல் மட்டும் அழிந்ததே யொழிய உயிர் விண்ணில் காற்றோடு காற்றாய் வானோரமாக வாழ்கின்றார். எனவே அமைதி அடைவோம். ஆறுதல் பெறுவோம்.

அமைதி! அமைதி! அமைதி!

**– நா.குமரிவேந்தன்(மகேந்திரராசா) –**
**மின் கண்காணிப்பாளர் (ஓய்வு)**
**நிறுவர்: குமரித்தமிழ்ப் பணி மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாயிராம்

இல.D8 ஆனந்தம் பண்ணை உருத்திரபுரம் கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாதேவி கணேசலிங்கம் அவர்கள் சிறுவயது முதலே தெய்வபக்தியும் சேவை மனப்பான்மையும் கொண்டவர். அவரது "தெய்வீகத்தகைமை" அவரது நெருங்கிய உறவினர் மூலமாக கலியுக அவதாரமான பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவைக் கும்பிடவும் அவரது வழிகாட்டலில் ஓரளவு வழி நடக்கவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இல்லறமே நல்லறம் என்ற ஒழுங்கில் பண்புள்ள அன்புக் கணவரோடும், பெற்றோரை மதிக் கின்ற பாசமிகு பிள்ளைகளோடும், இல்லற வாழ்வை இனிதே வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் இவருக்கு தீர்க்க முடியாத ஒரு நோய் வந்த போதிலும் இறைவழிபாட்டிலும் குடும்பக் கடமைகளிலும் சிறந்த ஒரு குடும்ப பெண்ணுக்குரிய உதாரணமாகத் திகழ்ந்தார்.

இவருக்கு நோய் வந்துற்ற காலங்களில் இவரது தீவிர வழி பாட்டின் காரணமாக பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா இவருக்கு காட்சி (Vision) கொடுத்து "நான் உன்னோடு இருக்கிறேன்" என்று அருள் வாக்கு கொடுத்தது இவரை உன்னதமான பக்தி நிலைக்கு உயர்த்தி விட்டது. மகாத்மா என்று போற்றப்படும் ஞானியர்கட்கு எப்படி நோய் வந்தால் அவர்கள் உடல் உணர்வு இல்லாது ஆத்ம நிலையில் என்றும் இருப்பதினால் அந்த நோயின் தாக்கமே தெரியாது வாழ்ந்து வருவது போன்று திருமதி கலாதேவி அவர்களும் தீவிர பக்தியுடன் நோயின் சுவடு இல்லாது தாவடி சாயி இல்லத்தில் நடைபெறும் ஆன்மீகப் பயிற்சி சாதனைகளிலும் குறிப்பாக வைகாசி மாதத்தில் நடைபெறும் இருபத்தி யொரு நாட்கள் ஓம் கார, திருநீற்று பதிக சாதனைகளிலும் தவறாது பங்குபற்றி வந்ததோடு மட்டுமல்லாது தன்னை ஆத்ம விழிப்புணர்வில் நிலை நிற்கக் கூடியதாகவும் ஆக்கிக் கொண்டார்.

இல்லற வாழ்க்கையை அன்பு மயமான தெய்வீக வாழ்வில் வாழ்ந்து வந்த ஒரு உத்தமமான பக்தை தனது இறுதி மூச்சையும் சர்வமான சாதாரணமாக எந்த ஒரு உடல் உபாதையும் இல்லாமல் சரள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நல்ல வார்த்தைகளைக் கதைத்துக் கதைத்து இறை சிந்தனையி லேயே தன்னை இறைவனுடன் ஐக்கியமாக்கிக் கொண்டார். அந்த பக்தி மயமான உன்னத உணர்வை அவரைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் அவரோடு கூடிப் பழகிய எம் போன்ற எல்லோருக்கும் தெய்வீகத்தின் அரும்பெரும் கருணையினை அனுபவிக்க வைத்து விட்டது. அது மட்டு மன்றி அன்னாரின் வாழ்வு பகவானின் அருள் வாக்குகளையும் சிந்திக்க வழிகாட்டுகிறது.

1) இறைவனே ஆன்மீக மருத்துவர். இறைவனைத் தேடுங்கள். இறைவனில் தங்கியிருங்கள். நீங்கள் இறைவனாகி விடுவீர்கள்.
2) நான் உன்னுடன் இருக்கும் போது உனக்கு ஏன் பயம்? சாயி என்றும் எங்கும் உன்னுடன் இருப்பதை நம்பு.
3) இறைவனால் எந்த வடிவத்திலும் வர முடியும். அப்படி வருவார். நீ விரும்பாத, எதிர்பார்க்காத வடிவத்தில் இறைவன் வந்தாலும் அடையாளம் காண மறுக்காதே.
4) எனது சக்தியை அளவிட முற்பட்டால் உனக்கும் தோல்வி தான் எஞ்சும். அதற்குப் பதிலாக உன்னை ஆராய்ந்து அறி! நீ யார்? இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டால் என்னை அறியும் முறையையும் தெரிந்து கொள்வாய். நான் எதையும் படிப்பதில்லை. தவம் தியானத்தில் ஈடுபடுவதில்லை. நான் ஒரு யோகியுமில்லை, சித்தனும் அல்ல, எல்லா சாதகர்களையும் நல்வழிப்படுத்தி ஆசீர்வதிக்கவே வந்துள் ளேன்.
5) அன்புக்காக அன்பு செலுத்தப்பட வேண்டும். அமரத்துவம் என்ற உயர் நிலைக்கு உயர்வதற்காக அன்பு செலுத்தப்பட வேண்டும். ஞானத்தின் பேரொளி நமக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அன்பு செலுத்துதல் அவசியம். ஞானம் பிரகாசம் ஒளி இவற்றின் கூட்டுத் தான் என்கிற பிரேமை "அன்பு" பிரேமை தான் பிராணன் பிரேமையின் பிரதிப் பிம்பம். "கருணை" என்கிற இரக்கம்.
(ஆதாரம் சத்திய வாசகங்கள் மற்றும் அன்பு வழி)

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**- சாயி இல்லம் -** தாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு தங்களுடைய அனுதாபங்களைத் துண்டுப்பிரசுரமாகவும், பதாதைகள் ஆக சமர்ப்பித்தவர்களுக்கு எம் குடும்பம் சார்பான மேது நன்றியினை தெரிவிக்கின்றோம் .........

01) நான்காம் வருட மாணவர்கள் – நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்

02) 2013 பொறியியல் பீட மாணவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

03) 2005 O/L மாணவர்கள் உருத்திரபுரம் மகாவித்தியாலயம்

04) பிரதிப்பணிப்பாளர் விரிவாக்கம் – உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்க அலுவலகம் கிளிநொச்சி)

05) அதிகாரிகள், உத்தியோகத்தவர்கள், ஊழியர்கள்– விவசாயத் திணைக்களம் விரிவாக்கம், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், அரசவிதை உற்பத்திப் பண்ணை – வவுனியா

06) பிரதி விவசாயப்பணிப்பாளர் வரிவாக்கம், அலுவலக நண்பர்கள்– யாழ் மாவட்டம்

07) பண்ணை முகாமையாளர்கள், சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் – வட்டக்கச்சி கிளிநொச்சி

08) உத்தியோகத்தவர்கள், உழியர்கள் – பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் – இரணைமடுச் சந்தி கிளிநொச்சி

09) குமார் விரிவுரையாளர்

10) கமக்கார அமைப்பு D10 - D9 உருத்திரபுரம் கிளிநொச்சி

11) அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள் – கிளி–உருத்திரபுரம் மகாவித்தியாலயம்

12) பாடசாலைச்சமூகம் – கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை

13) உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும், சனசமூ நிலையமும் – உருத்திரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) நண்பர்கள் – கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் – கிளிநொச்சி

15) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் P.L.O.T.E
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி D.P.L.F

16) மதி மாமா குடும்பம், பிள்ளைகள், மருமக்கள் – நெடுந்தீவு

17) **Holland** – சாள்ஸ் லோகா குடும்பம், சீலன் யசந்தி குடும்பம், செல்வா றஞ்சி குடும்பம்
**Canada** – சங்கர் கணேஸ் றசிக்கா குடும்பம்

18) மாணிக்கவாசகர் விஜயகுமார் – முன்னாள் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் – வவுனியா
சமாதான நீதவான் குடும்பம் – செம்மலை முல்லைத்தீவு

19) பஸ்தியாம்பிள்ளை குடும்பம் – வவுனியா

20) உருத்திபுரம் கிழக்கு – கிராம அபிவிருத்திச் சங்கம்
8ம் வாய்க்கால் – உருத்திரபுரம்

21) D8 கமக்கார அமைப்பு – உருத்திரபுரம்

22) மகாதேவ ஆச்சிரமம் குடும்பம் – ஜெயந்திநகர் – கிளிநொச்சி

23) வசந்தமலர் குடும்பம் – D8 ஆனந்தபுரம் பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் கலங்கள் உருவாகும் விதம்

## Cancer ஐப்பற்றி சில தகவல்கள்

எமது உடலில் சில சமயங்களில் Cell's இறப்பதில் அவை சில சமயங்களில் கட்டியாக வளர்ந்துவரும் இது சில சமயம் புற்றுநோய் என்று அழைக்கப்படுகின்றது. (எல்லா கட்டிகளும் புற்றுநோய் கட்டிகள் அல்ல அவை B10 OBTOY செய்து தான் தீர்மானிக்கப்படுகிறது)

**உடலில் உருவாகும் கட்டிகள் 2 வகைப்படும்.**

(01) புற்றுநோய் சாராக்கட்டி (Non Cancerous/Benign) – உடலின் மற்றப் பாகங்களிற்கும் பரவுவதில்லை

(02) புற்றுநோய் சார்ந்த கட்டி (Malignant /Cancerous) - உடலின் மற்றப் பாகங்களிற்குப் பரவக் கூடியவை.

புற்றுநோய் சார்ந்த கட்டிகள் (Malignant Tumor) அருகிலுள்ள திசுக்களிற்கும் (Tissues) பரவி, பின்னர் இரத்தம்/ நிணநீர் வழியாக உடலின் மற்றைய பாகங்களிற்கு எடுத்துச் செல்லப்படும். புதிய இடத்திற்குப் பரவுகின்ற புற்றுநோய் இரண்டாம் நிலைப் புற்றுநோய் (Metasrasis) என அழைக்கப்படுகின்றது.

## புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகின்றது

புற்று நோய் யாருக்கும் வரலாம். பெரும்பாலான புற்றுநோய்கள் வருவதற்கான காரணங்கள் தெரியாமல் உள்ளன.

## புற்றுநோய்க்கான சில காரணிகள்

(01) புகைப்பிடித்தல்

(02) மது அருந்துதல் (அதிகளவு)

(03) சத்தான உணவு உட்கொள்ளாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(04) உடற் பயிற்சி இன்மை

(05) முதுமை அடைதல் – பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களிற்கு சாதாரணமாக உள்ளது.

(06) பரம்பரை – சிறிய அளவில் பாதிக்கப்படுகின்றது.

(07) சில இரசாயனங்கள் – **உதாரணம் :-** அஸ்பெஸ்டாஸ் (Caspertos)

(08) வைரசுகள் – **உதாரணம் :-** மனித பபிலோமா வைரஸ் (Human Papilloma Virus) அதாவது உடலுறவின் மூலம் பரவும் வைரசுக்கள் சில சமயம் புற்றுநோயை உண்டாக்கும்.

(09) கதிர்வீச்சு

புற்றுநோயை எவ்வாறு ஆரம்பநிலையில் கண்டுபிடிப்பது

புற்றுநோயை ஆரம்ப நிலையிலே கண்டு பிடித்தால் வெற்றி கரமாகச் சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியும்.

நீங்கள் ஏதாவது அசாதாரணமாக உடலில் உணர்ந்தால் உடனடியாக பரிசோதனை நிலையங்களிற்குச் செல்லவும்.

**உதாரணம்:-** குடல், கருப்பை போன்றவற்றைப் பரிசோதனை செய்து அறிந்தால் 100% குணப்படுத்தலாம்.

**பின்வரும் அசாதாரண மாற்றங்கள் உடலில் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும்**

(01) காரணமில்லாத எடைக்குறைவு (5Kg – சில மாதங்களில்)

(02) ஆறாத புண்

(03) கட்டிகள் / அழற்சி

(04) காரணமில்லாத இரத்த இழப்பு

(05) இடைவிடாத இருமல் 3 கிழமைகள்

(06) மூச்சுத்திணறல்

(07) தொண்டைக் கரகரப்பு

(08) மார்பகத்தில் கட்டிகள் / கடினமான பகுதி, அசாதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ப்புக் காம்பிலிருந்து நீர் வடிதல், மார்பின் உருவ மாற்றம், வடிவம், நிறமாற்றம், அசாதாரண வலியுள்ள மார்புக்காம்பு

(09) தொடர்ந்த குமட்டல் / வாந்தி / இரத்த வாந்தி

(10) பெண்ணின் பிறப்புறுப்பிலிருந்து இரத்தம் வருதல், மாதவிலக்கிற்கு இடையில் மெனோபோசின் (Menopause) பிறகு

(11) மச்சங்கள் – வடிவம் / நிறமாற்றம், இரத்தம் வடியும் மச்சம்

(12) மலத்துடன் இரத்தம் வருதல்

(13) நீடித்த வயிற்றுப்போக்கு / மலச்சிக்கல்

(14) உடலில் எங்காவது குறையாத வலி

அசாதாரண மாற்றங்கள் உடலில் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும். அடுத்து புற்றுநோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால்:-

அதன் வகை மற்றும் நிலை (Srage) யைப்பொறுத்து சிகிச்சை தீர்மானிக்கப்படும்.

மருத்துவர் புற்றநோயைக் குணப்படுத்த அல்லது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளக் கூடிய வகையில் சிகிச்சையைத் தீர்மானிப்பர்.

## புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க

(01) புற்றுநோயைக் கண்டுபிடிக்க அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ளவும்.

(02) ஆரோக்கியமான எடையைப் பேணவும்

(03) மது அருந்துவதைக் குறைக்கவும்

(04) சத்தான உணவு உட்கொள்ளவும்

(05) சுறுசுறுப்பாக இருக்கவும்

(06) புகைப்பிடித்தலை நிறுத்தவும்

(07) அசாதாரண மாற்றங்கள் இருப்பதைக் கவனிக்கவும்

★ 50 வயதிற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் குடல்புற்றுநோய் அறிகுறிகளை ஆண்டு தோறும் பரிசோதனை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 50–69 வயதுப் பெண்கள் ஆண்டுதோறும் (Mammogram) 'மமோகிரம்' செய்து கொள்ள வேண்டும்.

★ 18–70 வயதுப் பெண்கள் ஆண்டு தோறும் Paptest செய்து கொள்ள வேண்டும். (கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க)

## ஆரோக்கிய எடைக்கு:-

இடுப்பளவு ஆண் – 100cm, பெண் – 85cm

இந்த அளவிற்கு மேற்பட்டால் மலக்குடல் புற்றுநோய், மார்பகப்புற்று நோய், உணவுக்குழாய் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

## ஆலோகனை :-

கொழுப்பு, இனிப்பு அதிகமுள்ள பானங்களைக் குறைத்தல்
நிறையக் காய்கறி உண்ணுதல்
கொழுப்பு நீக்கிய இறைச்சியை உண்ணவும்
இனிப்பான மென்பானம், பழரசம், மதுவைக் குறைக்கவும் / தவிர்க்கவும்.

மது – மிதமான அளவு கூட:- வாய், தொண்டை, குரல்வளை, உணவுக்குழாய், கல்லீரல், மார்பகப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பை அதிகரிக்கின்றது.

சத்தான உணவு:-

சரிவிகித உணவு சக்தியைக் கொடுத்து ஆரோக்கிய எடைக்கு உதவுகிறது.

★ சிவப்பு இறைச்சி அதிகம் சாப்பிடுவதால் புற்றுநோய் வாய்ப்பு அதிகரிக்கின்றது.

★ 5 பங்கு காய்கறி, 2 பங்கு பழம் தினம் தோறும் சாப்பிடவும்.

★ முழுத்தானிய ரொட்டி, தானியவகை உட்கொள்ளவும்.

★ வாரத்திற்கு 2 அல்லது 3 தடவை சிவப்பு இறைச்சியை உண்ணவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சொசேஜ், பன்றி தொடைக்கறி கட்டுப்படுத்தவும்/ தடுக்கவும்.

★ சில பழவகை/ உணவுகள் புற்றுநோயைத் தடுப்பதற்காக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

**உதாரணம்:-** ப்ராக்கோலி (Broccoller) பூண்டு, கரட், காளான், நட்ஸ், பப்பாளி, அவக்காடோ, திராட்சை, தக்காளி, ரெட்வைன் (அளவாகப் பருகவேண்டும்.)

## உடலளவில் சுறுசுறுப்பாக இருக்கவும்

★ இடைவிடாத உடற் செயற்பாடுகள் புற்றுநோய் பாதிப்பைக் குறைக்கும்

★ முடிந்தளவு சுறுசுறுப்பாக இருக்கவும்.

★ இயலுமானவரை நடந்து செல்லவும், சைக்களில் செல்லலாம்.

★ லிப்டில் செல்லாது படிகளைப் பாவிக்கலாம்.

★ எவ்வளவு நடக்க இயலுமோ அவ்வளவு நடக்கவும்.

## புகைப்பிடித்தலை நிறுத்தவும்

இதனால் நுரையீரல், வாய், மூக்கு பகுதியிலுள்ள சைனஸ் பகுதி தொண்டை, குரல்வளை, கருப்பை, குடல், சிறுநீர்க்குழாய், சிறுநீர்ப்பை, சிறுநீரகம், உணவுக் குழாய், கணையம், நாக்கு, கருப்பைவாய், எலும்பு மச்சை, இரைப்பை, புற்றுநோய் வர வாய்ப்புள்ளது.

## சுவாசப்பை புற்றுநோய்

காரணி :– புகைப்பிடித்தல்

அறிகுறி :– ★ தொடர்ச்சியான இருமல் 3 கிழமை

★ மூச்சுத்திணறல், இழுப்பு

★ இருமும் போது சளியுடன் இரத்தம் வெளியேறல்

★ தொண்டைக் கரகரப்பு (Hoarseness)

★ இருமும் போது வலி ஏற்படல்

★ பசியின்மை

★ எடைக்குறைவு, எடை இழப்பு

★ அசாதாரண களைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ள அறிகுறிகள் தென்படின் உடனடியாக மருத்துவரை நாடவும்.

## பெருங்குடல் புற்றுநோய்

பாதிக்கப்படும் பகுதிகள்:- நேர்குடல் (Colon), குதம் (Rectum) அதிகமாகக் காணப்படும் புற்றுநோய் கோலோன் புற்றுநோய் (Colon Cancer)

**அறிகுறிகள்:-**

- ★ பிரகாசமான சிவப்பு இரத்தம் மலத்தில் வெளியேறல்
- ★ அசாதாரண Bowel habbit
    - ★ வயிற்றுப்போக்கு
    - ★ மலச்சிக்கல் (6 கிழமைகள்)
- ★ எடைக்குறைவு
- ★ வயிற்றுப்பகுதியில் வலி
- ★ மலம் கழித்த பின்பும், முழுதாக மலங்களித்த திருப்தி இன்மை
- ★ வயிற்றில் வாயுத்தொல்லை, வாய்வு, Cramps

களைப்பு:- குருதியிழப்பால் அனீமியா, ஏற்படலாம்.

புற்றுநோய்க் கலங்களால் குடலில் தடை (Blockage) ஏற்படலாம். இதனால் மலச்சிக்கல், வலி, வாய்வுத் தொல்லை ஏற்படலாம். மேலுள்ள ஏதாவது அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும்.

ஆண்களில் மட்டும் காணப்படும் சுரப்பி:- வோல்நட் (Walnut) அளவில் காணப்படும் இச் சுரப்பி, வயது அதிகரிக்கும் போது பெரிதாக வருகின்றது. இச்சுரப்பி சிறுநீரக்கானைச் (Uretnra) சூழ ஆண் உறுப்பில் உள்ளது.

**அறிகுறிகள்:-**

- ★ சிறுநீர் கழிப்பதில் சிரமம்
- ★ சிறுநீர் குறைவாகப் போதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு இருத்தல்
★ அடிக்கடி சிறுநீர் கழித்தல்
★ இரத்தம் சிறுநீருடன் வெளியேறல்

PSA (Prostate specific Antigen) test மூலம் ஆரம்ப நிலையிலே அறியாலம்.

## சிறுநீர்ப்பை புற்றுநோய்

### அறிகுறிகள்:-

★ சிறுநீரில் இரத்தம் வெளியேறல் ஐலிமி ஞ்ழிஷ்ஐக்ஷூற்யி
★ சிறுநீர் கழிக்கும் போது எரிவு
★ சிறுநீர் அடிக்கடி கழிக்கவேண்டும் போல உணர்தல்
★ மேலுள்ள அறிகுறிகள் தென்படின் உடனடியாக மருத்துவரை நாடவும்

### அறிகுறிகள்:-

★ பெண்களில் பொதுவானது
★ அரிதான ஆண்களிலும் வரலாம்

### அறிகுறிகள்:-

★ வலி இல்லாத கட்டி
★ அளவு, உருவ மாற்றம்
★ தடிமனான பகுதி/ தோல்
★ முலைக்காம்பு உள்ளிழுக்கப்பட்டு இருத்தல் (inverteal nipple) கட்டி இருத்தல்
★ முலைக்காம்பிலிருந்து நீர் வடிதல் (Discharge)
★ Climpung of the skin of breast
★ கமக்கட்டில் வீக்கம் (Swelling in armpit)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூலகப் புற்றுநோய் (Ovarian cancer)

- ★ அறிகுறி தென்படுவதில்லை
- ★ ஆரம்பத்தில்
  - ★ பசியின்மை
  - ★ குமட்டல்
  - ★ அதிகளவு வாய்வுத் தொல்லை
  - ★ எடை அதிகமாதல்
  - ★ வயிற்றுப் பகுதியில் வீக்கம்
  - ★ வலி – அடிவயிற்றுப் பகுதியில்
  - ★ நாரிப்பகுதியில் வலி (lower back pain)
  - ★ உடலுறவின் போது வலி
  - ★ பெண் உறுப்பிலிருந்து குருதி வெளியேறல்
  - ★ Bloating
  - ★ அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் போன்ற உணர்வு

மேற்படி ஏதாவது அறிகுறி இருப்பின் உடனடியாக மருத்துவரை நாடவும்.

புற்றுநோயை ஆரம்பத்திலே கண்டுபிடித்தால், முறைப்படி சிகிச்சை அழிப்பதன் மூலம் இல்லாமல் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்களும் எழுதியவர்களும்

| | | |
|---|---|---|
| ஆத்திசூடி | – | ஔவையார் |
| நளவெண்பா | – | புகழேந்திப்புலவர் |
| பெரியபுராணம் | – | சேக்கிழார் அடிகள் |
| கந்தபுராணம் | – | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடல் | – | பரஞ்சோதி முனிவர் |
| இராமாயணம் | – | வான்மீகி முனிவர் |
| திருக்குறள் | – | திருவள்ளுவர் |
| சீறாப்புராணம் | – | உமறுப்புலவர் |
| திருப்புகழ் | – | அருணகிரிநாதர் |
| சத்தியசோதனை | – | மகாத்மாகாந்தி |
| பாஞ்சாலிசபதம் | – | பாரதியார் |
| மகாபாரதம் | – | வியாசர் |
| சிலப்பதிகாரம் | – | இளங்கோவடிகள் |
| பகவத்கீதை | – | வேதவியாசர் |
| நற்சிந்தனை | – | யோகர்சுவாமிகள் |

**காற்றுக்கு எதிராகப் போராடிய பிறகே**
**பட்டங்கள் உயரச் சென்று பறக்கின்றன**
**கஸ்டங்களை எதிர்த்துப் போராடுகிறவர்கள்**
**பட்டங்களைப் போல வாழ்வில் உயர்வார்கள்.**

**– வின்ஸடன் சர்ச்சில் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றிக்கும் அப்பால்.........

"என் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய் நன்றி கொண்ட மகற்கு"

எம் குடும்பத் தலை உயிர் விருட்ச்சம் வேர் அறுத்துச் சாய்ந்த போது, நாம் நிலை குலைந்து, நின்மதி தான் இழந்து, மனம் அது இறுகி மகிழ்வது தொலைந்து மானிடம் வெறுத்து மார்பது வெடித்து நாம் மருண்டு போயினோம்......

எம் நல் குத்துவிளக்கின் குருதி வற்றி ஒளி இழந்து உயிர் பிரிந்து, உடல் எரிந்து போன போது மனம் உடைந்தும் கவலையுற்றும் கண்ணீர் வடித்தும், இதுவரை நாளும் உணவளித்தும், தம் உணர்வளித்தும், பலசார் உதவிகள் செய்தும் எம் குடும்பத் துயருக்குள் உம்மோடு எமைச் சுமந்து அனுதாபமும், ஆறுதலும் அன்பும், பரிவும், அரவணைப்பும் எமக்களித்து கண் கலங்கி நின்ற எம் உற்றார், உறவினர், நண்பர்கள், நம் அயலவர்கள் யாவர்க்கும் இங்கு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத இதய பூர்வ நன்றிகளை காணிக்கை ஆக்குகின்றோம்.

எம் மனத்திடையே இணைந்து இறுகிப் பிணைந்து தம் உணர்வுகளைப் பிழிந்து உருக்கமுடன் துண்டுப் பிரசுரங்களையும், பதாதைகளையும் தம் உடல் சார் உதவிகளையும் எமக்களித்த.... எம் அன்பு உறவுகளுக்கும் இத் தருணம் எம் மனமார் நன்றி நட்பினைக் காணிக்கை ஆக்குகிறோம்.


மலர்வாடி மண்ணில் விழும் தருணம் வரை தமை வருத்தி இரவு பகல் பாராது கொடையளித்து தம் உயிர் காப்பது போல் சாவினை வெல்வதற்காய் உயிர்மூச்சு உள்ளவரை உடன் இருந்து ஊக்குவித்து நலன்பேணக் காத்து நின்ற மருத்துவர்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், உலகத் திசையிலிருந்து எம் உயிர் விழுந்த சேதி கேட்டு தொலை உரையில் தமைத் தொலைத்தும் துடித்தும் தொடர்பு கொண்ட உறவினர்கள் நண்பர்களுக்கும் நிதி உதவி தான் கொடுத்து காலன் சதியினைக் கடிந்தவர்க்கும் எம்மனம் மதி உயர் சார் நன்றிக்கும் அப்பால் நாடுகின்றோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




(★ - அமரத்துவம் அடைந்தவர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவளின் இறுதிப்பக்கமும் என்னுடைய கடைசிப்பக்கமும்



என் வாழ்க்கைப் புத்தகத்தின்
முகவுரையும் முடிவுரையும் ஆனவளே...
பால்த்தீவின் பவளக்கொடி
பசுந்தாரகை என்னவளே...
தேனூறும் உன் அழகில் - நான்
நாவூறி மெய்மறந்து
வழிந்து உன் பின்னகர்ந்து
காதலாகி கசிந்து மெல்லொழுகி -உன்
காலடியில் சரண் புகுந்தேன்...
தேனமுதச் சுவையுடையாள்
தேமதுரப் பொருளுடையாள் - என்
தோள் தொட்ட நாள் முதலாய்
ஊன் உருகி ஒளி தந்தாள்
என்ன தவம் நான் செய்தேன்
இன்னவளை நான் பெறவே....
என்குடும்பத் திருவுருவே
எவற்கும் எட்டா முழு நிலவே....
முற்றுப் புள்ளி வைத்து விட்டு
முடித்து விட்டாய் வாழ்வினையே
சற்றுத் தள்ளி வைத்திருப்பின் - உன்
சாவுக்குள்ளும் நான் இணைந்திருப்பேன்
காதலித்தே கைபிடித்தோம்
கைபிடித்தே காதலித்தோம்
போதையடி உன்னழகு
தேவையில்லை ஏதுமிங்கு
பாதை தெரியவில்லை
படுகுழியில் வாடுகின்றேன்....

முற்றுப்புள்ளி.

Muthu Printers, Chunnakam. Tel: 077-8038629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org